இது ரகசியம் அல்ல!

பத்திரிகையாளர் நண்பர் லஸந்த விக்கிரமதுங்கவின் பத்தாவது ஆண்டு நினைவு தினம் நேற்று. அதை நினைக்க எனக்கு என்னவோ மனதில் ஓர் இனந்தெரியாத பயம் – நடுக்கம் – என்னை யறியாமலேயே பீறிடுகின்றது.

பக்கம் 02

பக்கங்கள்: 12 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2049 மார்கழி 25 புதன்கிழமை 09.01.2019 கதிர் 65

# போர்க்குற்ற விசாரணை உள்நாட்டிலேயே நடக்கும்

## நாடாளுமன்றில் அரசு நேற்று உறுதி



கொழும்பு, ஜனவரி 09

இராணுவத்தினர் மீதான போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகள் இடம்பெறுமாக இருந்தால் அவை உள்நாட்டிலேயே இடம்பெறும். இராணுவத்தினரைச் சர்வதேச நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப்போவதாக எதிர்க்கட்சிகள் மேற்கொள்ளும் பரப்புரைகளில் எந்தவித உண்மையும் இல்லை

-இவ்வாறு நேற்றுச் சபையில் அறிவித்தார் அமைச்சர் அஜித் பி. பெரேரா.

பக்கம் 11

## சர்வதேச நீதிமன்றம் தேவையே இல்லை

### ஜே.வி.பியும் தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 09

கடந்த கால அரசியல் நெருக்கடிகளிலிருந்து இலங்கைக்குச் சர்வதேச நீதிமன்றம் தேவையில்லை என்பது நிரூபணமாகியுள்ளது என, நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றுச் செவ்வாய்க்கிழமை கூடிய நாடாளுமன்ற அமர்

பக்கம் 11

## சம்பந்தனை முதலில் சந்தித்தார் வடக்கின் புதிய ஆளுநர் சுரேன்!



கொழும்பு, ஜன. 09

வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக நியமனம் பெற்ற கலாநிதி சுரேன் ராகவன், தமிழ்த்

பக்கம் 11

## திருகோணமலையில் அமெ. படை முகாமா?

### சபையில் வினா தொடுத்தார் விமல்

கொழும்பு, ஜன. 09

திருகோணமலையில் அமெரிக்கக் கடற்படைத்தளமொன்றை அமைப்பதற்கு இலங்கை அரசு இணக்கம் வெளியிட்டுள்ளதா என்று விமல்

பக்கம் 11

## கிணற்றுக்குள் வீழ்ந்து 11 வயதுச் சிறுமி சாவு!

### மலையாளபுரத்தில் துயரம்

கிளிநொச்சி, ஜன. 09

கிளிநொச்சி மலையாளபுரம் கிராமத்தில் பதினொரு வயதுச் சிறுமி கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்

பக்கம் 11

## ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவார் கோட்டா

### கூறுகின்றார் டிலான் பெரேரா

கொழும்பு, ஜன. 09

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அல்லது முன்னாள் பாது

பக்கம் 11

## ஜனாதிபதி வேட்பாளரை மஹிந்தவே தீர்மானிப்பார்!

### மைத்திரிபாலவின் கழுத்தை இறுக்குகிறது தாமரை மொட்டு



கொழும்பு, ஜன. 09

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளரை எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவே தீர்மானிப்பார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் பேராசிரியர் ஜி.எல்.

பக்கம் 11

## 1099 ஏக்கர் விவசாயக் காணிகளை ஜன. 19 விடுவிக்கிறது இராணுவம்

கொழும்பு, ஜன. 09

வடக்கு மாகாணத்தில் இராணுவத்தினரால் விவசாய நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் ஆயிரத்து 99 ஏக்கர் நிலப்பரப்பு எதிர்வரும் 19 ஆம் திகதி சம்பந்தப்பட்ட திணைக்களங்களிடம் கையளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பக்கம் 11

## அரசியல் கைதிகளுக்கு மாத்திரம் ஏன் பிணை வழங்க முடியவில்லை?

### சபையில் சார்ள்ஸ் எம்.பி. கேள்வி



கொழும்பு, ஜன. 09

மனைவி, பிள்ளைகளைப் பிரிந்து 11 மாதங்கள் சிறையிலிருந்த அர்ஜுன் அலோசியஸுக்குப் பிணை வழங்க முடியும் என்றால், 11 வருடங்களுக்கு மேலாகச் சிறைச்சாலையில் வாடும் அரசியல் கைதிகளுக்கு ஏன் பிணை வழங்க முடியாது.?

– இவ்வாறு கேள்வி

பக்கம் 11

## மஹிந்தவே எதிர்க்கட்சித் தலைவர்!

### சபாநாயகரின் இறுதி முடிவு சபையில் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 09

இலங்கையின் பிரதான எதிர்க்கட்சித் தலைவராக மஹிந்த ராஜபக்ஷவே செயற்படுவார் எனப் பிரதிச் சபாநாயகர் ஆனந்த குமாரசிறி நேற்றுச் சபையில் அறிவித்தார்.

2019ஆம் ஆண்டுக்கான முதலாவது நாடாளுமன்ற அமர்வு நேற்று பிற்பகல் ஒரு மணிக்குக் கூடியது.

பக்கம் 11

## ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு நாளை மறுதினம்?

கொழும்பு, ஜன. 09

ஜனாதிபதித் தேர்தல் விரைவில் நடத்தப்படும் என்றும் அதற்கான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் வெள்ளியன்று வெளியாகும்

பக்கம் 11

## குறுக்கு வழி அதிகாரப் பகிர்வு நிலையான சமாதானம் தராது

### நாமல் எம்.பி. விளக்கம்

கொழும்பு, ஜன. 09

முஸ்லிம் கட்சித் தலைவர்கள் மாகாண சபை சட்டத் திருத்தத்தில் கோட்டை விட்டதுபோல் அரசமைப்பிலும் கோட்டை விட்டுவிடக்கூடாது எனக்

பக்கம் 11

## பண்டாவின் கொள்கைகளை விற்றுத் தின்னும் திருடர்கள்!

### சந்திரிகா நேற்றுச் சீற்றம்

கொழும்பு, ஜன. 09

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் நிறுவுநரும் முன்னாள் பிரதமருமான பண்டாரநாயக்கவின் பெயரையும் கொள்கைகளையும் விற்று உண்ணும்

பக்கம் 11

## இராணுவ வாகனம் - ஓட்டோ மோதி இளைஞர்கள் மூவர் பரிதாபச் சாவு!

### இயக்கச்சியில் நேற்றுத் துயரச் சம்பவம்



யாழ்ப்பாணம், ஜன. 09

ஓட்டோவும் இராணுவ வாகனமும் நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற விபத்தில் இளைஞர்கள் மூவர் உயிரிழந்தனர். மற்றொருவர்

பக்கம் 11

# கஞ்சாக் கடத்தலில் ஈடுபட்டவரை விடுவிக்கக் கூட்டமைப்பு அழுத்தம்

## சபையில் டக்ளஸ் எம்.பி. குற்றச்சாட்டு

கஞ்சா கடத்தலில் ஈடுபடும் முக்கிய சூத்திரதாரியைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர் ஒருவர் வழங்கிய அழுத்தத்துக்கு அமைய விடுவித்தமை தொடர்பாக சபையின் அவதானத்துக்குக் கொண்டு வர விரும்புகின்றேன். அவ்வாறு அரசியல்வாதியின் அழுத்தத் துக்கு அடிபணிந்து நால்வர் விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் விடுவிக்கப்படுவதற்கு பொறுப்பாக இருந்த உயரதிகாரி மீது உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்

இவ்வாறு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செய லாளர் நாயகம் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தினார்.

நாடாளுமன்றில் நேற்று 1996ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க இராஜதந்திரச் சிறப்புரிமைகள் சட்டத்தின் கீழான கட்டளைகள் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடமராட்சி கிழக்கு மாமுனை கிராமத்தைச் சேர்ந்த கந்தசாமி கோகுலதீபன் என்பவர் கேரளக் கஞ்சாக் கடத்தலில் தொடர்ந்து ஈடுபட்டு வருபவர் என அந்தப் பகுதியில் உள்ளவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்த நிலையில், அவர் உள்ளிட்ட ஐவர் கடந்த டிசெம்பர் 3ஆம் திகதி அன்று கேரளக் கஞ்சாவைப் பொதி செய்து கொண்டிருந்த வேளையில், கிளிநொச்சிப் பொலிஸார் அவர்களைக் கைது செய்ய முற்பட்டனர். எனினும் அவர்கள் பொல்லுகளைக் கொண்டு பொலிஸாரைத் தாக்கியுள்ளனர்.

ஆனால் பொலிஸாரின் துணிச்சலான செயற்பாட்டினால் அவர்கள் சுற்றிவளைக்கப்பட்டு, கைது செய்யப்பட்டுக் கிளிநொச்சிக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்தனர்.

அவர்களை விசாரணை செய்து அவர்களுக்குரிய குற்றப் பத்திர அறிக்கைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் ஜனநாயகத்தைப் பாதுகாக்கவென உயர்நீதிமன்றில் வாதாடிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பொலிஸ் உயரதிகாரியைத் தொடர்புகொண்டு அழுத்தம் கொடுத்த தன் விளைவாகக் கோகுலதீபன் என்ற அந்த நபர் உடனடியாக விடுவிக்கப்பட்டுள்ளார்.

அவர் விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏனைய நால்வரும் கோகுலதீபனை விடுதலை செய்ய முடியுமாயின் ஏன் தங்களை விடுதலை செய்ய முடியாது? என நியாயம் கேட்டதன் அடிப்படையில் பொலிஸாரால் மறுநாள் விடுவிக்கப்பட்டனர் என்று தெரிய வருகின்றது. ஜனநாயகத்தைப் பாதுகாக்கவெனக் கூக்குரலிட்டவர்கள் சட்டம் ஒழுங்கை எவ்வாறு பாதுக்கின்றார்கள்? என்பது தொடர்பில் இந்தச் சபையில் உள்ளவர்கள் அறிந்து கொள்ளவேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

அத்துடன் அவ்வாறு அரசியல்வாதியின் அழுத்தத் துக்கு அடிபணிந்து – வீரமுடன் செயற்பட்ட பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட அந்த நபர்கள் விடுவிக்கப்படுவதற்கு பொறுப் பாக இருந்த – உயரதிகாரி மீது உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனச் சட்டம் ஒழுங்கு அமைச்சரான ஜனாதிபதியிடமும் பொலிஸ்மா அதிபரிடமும் இத் தருணத்தில் நான் கோரிக்கை விடுக்கின்றேன்– என்றார். ஐ

# புதிய ஆளுநர் குறித்து விக்கி கருத்து

யாழ்ப்பாணம், ஜன. 09

புதிய ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனின் நியமனம் குறித்து முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவித் துள்ள கருத்துக்கள் வருமாறு:-

முதன் முறையாக தமிழர் ஒருவர் வட மாகாணத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டிருக்கின்றமை வரவேற்கத்தக்க விடயம். யுத்தத்தின் பின்னர் வட மாகாணம் பல்வேறு நெருக்கடியான சூழ்நிலைகளை எதிர்கொண்டிருந்த வேளை மக்கள் மனமறியாத இராணுவ அதிகாரிகளையும் தென்னிலங்கை அரசியல்வாதிகளையும் ஆளுநர்களாக நியமித்து வட மாகாண சபையின் செயற்பாடுகளுக்கு குந்தகம் விளைவித்து வந்த அரசாங்கங்கள், முதல் முறையாக சிறந்த கல்விப் புலமையும் இனப்பிரச்சினை தொடர்பில் அரசியல் அறிவும் கொண்டுள்ள கலாநிதி சுரேன் ராகவனை நியமித்துள்ளமை எமக்கு மகிழ்ச்சி அளிக்கின்றது. இந்த நியமனத்துக்கு பின்னால் ஏதேனும் அரசியல் உள்நோக்கம் இருக்கின்றதா என்பதையும் அல்லது எந்தளவுக்கு ஜனாதிபதி, கலாநிதி சுரேன் ராகவனைச் சுதந்திரமாக செயற்பட அனுமதிப்பார் என்பதையும் நாம் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். ஆனால், கலாநிதி சுரேன் ராகவனின் அறிவும் புலமையும் அவரைச் சரியான முறையில் ஜனாதிபதிக்கோ அல்லது அரசாங்கத்துக்கோ அன்றி மக்களுக்காக சேவை செய்வதற்கு அவரை வழிநடத்தும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம்.

அதேவேளை, தமிழர் ஒருவரை வட மாகாணத்தின் ஆளுநராக நியமிப்பதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் மற்றும் அபிவிருத்தி அபிலாஷைகளை நாம் பூர்த்திசெய்ய முடியும் என்று பொருள் கொள்ளல் ஆகாது என்பதையும் குறிப்பிடவிரும்புகின்றேன். தமிழ் மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பது தொடர்பில் அரசாங்கத்துக்கு உண்மையான அக்கறை இருக்குமானால், இணைந்த வடக்கு கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வினை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதியும் அரசாங்கமும் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

பௌத்தசமயம் பற்றி ஆராய்ச்சி செய்த கலாநிதி சுரேன் அவர்கள் சிங்கள மொழி வழக்கிற்கு வர பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே பௌத்தம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது என்பதையும் அவ்வாறு பௌத்தம் அறிமுகப் படுத்தப்பட்ட போது சைவமதப் பாரம்பரியம் வடக்கு கிழக்கில் ஏற்கனவே நிலைபெற்றிருந்தது என்பதையும் சைவத்தில் திளைத் திருந்த திராவிட மக்களே பௌத்த சமயத்திற்கு மாறினார்கள் என்பதையும் அவர்களின் பௌத்த எச்சங்களே இன்று வட கிழக்கில் காணப்படுகின்றன என்பதையும் பின்னர் சைவமத பக்திப்பிரவாகம் தென்னிந்தியாவில் கொடிகட்டிப் பறந்த போது எம் மக்கள் மீளவும் சைவமதத்தினுள் உள்ளீர்க்கப்பட்டார்கள் என்பதையும் அறிந்தே இருப்பார். எனவே வடக்கு கிழக்கு மக்களால் அப்போது கைவிடப்பட்ட பௌத்தம் இன்று எமது அரசியல் யாப்பின் ஊடாக மற்றைய மதங்களுக்கு மேலாக முதல் நிலையளித்து திணிக்கப்படுவது மத மாற்றம் செய்வதற்கு ஒப்பாகும் என்பதையும் அவர் அறிந்திருப்பார் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

புதிய ஆளுநரை வரவேற்கும் அதே நேரம் எமது புதிய கட்சி அவருக்கு சகல ஒத்துழைப்புக்களையும் நல்க ஆயத்தமாக இருக்கின்றது என்பதையும் நான் தெரிவித்து கலாநிதி இராகவன் அவர்களின் பதவிக்காலம் மக்களின் ஏகோபித்த மதிப்பையும் ஆதரவையும் பெற வேண்டும் என்றும் வாழ்த்துகின்றேன். – என்றார்

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுபதுகளின் கடைசியில் கொழும்பில் நான் பத்திரிகைத் துறையில் பேனா பிடிக்க ஆரம்பித்த பின்னர் – ஓரிரு வருடங்கள் கழித்து – எங்களுக்கு *'ஜூனியராக'* – சகோதர ஆங்கிலப் பத்திரிகை நிறுவனத்தில் செய்தியாளராக வந்து சேர்ந்தார் இளைஞர் லஸந்த. இருவரும் சில வருடங்கள் ஒன்றாக நீதிமன்றச் செய்தியாளர்களாக இணைந்து பணியாற்றினோம். அவர் *'சன்'* ஆங்கிலப் பத்திரிகைக்கு. நான் *'தினபதி'* தமிழ் நாளிதழ் மற்றும் *'சிந்தாமணி'* வார இதழுக்கு.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குட்டிமணி, தங்கத்துரை உட்பட்ட தமிழ் இளைஞர்களின் வழக்குகள், அவர்களின் ஆள்கொணர்வு மனுக்கள் என்று பரபரப்பை ஏற்படுத்தும் நீதிமன்றச் செய்திகளை நாம் திரட்டிய காலம் அது.

பின்நாளில் விடுதலைப் புலிளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் பல்வேறு நாடுகளில் நடைபெற்ற அமைதிப் பேச்சுக்களை சேகரிக்கும் பத்திரிகையாளர்களாகப் பெரும்பாலும் எல்லாப் பேச்சுக்களின் போதும் நாம் சந்தித்துக் கொண்டோம்.

இந்தப் பேச்சுக்களின் போது தமிழர் தரப்பின் செய்திகளை – தகவல்களை – தென்னிலங்கைக்கு ஆங்கிலப் பத்திரிகைகள் வாயிலாகக் கொடுக்க வேண்டிய தேவை இருந்தது. லஸந்த மூலம் அந்தப் பணியைக் கனகச்சிதமாக நானே முன்னின்று முன்னெடுத்தேன். அதனால் எங்கள் நட்பும், உறவும் பலமடைந்தன. தென்னிலங்கைச் செய்திகள், தகவல்களை அவர் மூலம் உரிமையோடு உறுதிப்படுத்தும் வாய்ப்பும் எனக்குக் கிட்டியது.

யுத்தத்துக்கு மத்தியில் அப்படி நாம் நெருங்கி ஊடாடி, செய்தி பரிமாறிக் கொண்டிருந்த சமயத்தில்தான் அவர் படுகொலை செய்யப்பட்டார். அந்த அதிர்ச்சியிலிருந்து நான் மீளுவதற்கு இடையில் – சில வாரங்கள் கழித்து – வெள்ளை இன ஆஸ்திரேலிய செய்தியாளர் ஒருவர் தமது தொலைக் காட்சியின் காணொலிப் பேட்டி ஒன்றுக்காக எனது கொழும்புப் பத்திரிகை அலுவலகத்துக்கு வந்தார்.

அவரது முதல் கேள்வியே எனக்குத் தூக்கி வாரிப் போட்டது.

*"நீங்கள் ஒன்றுக்கு, இரண்டு பத்திரிகைகளுக்கு ஆசிரியர். எல்லாப் பத்திரிகை ஆசிரியர்களும் காரில் பயணம் செய்யும் போது நீங்கள் மட்டும் மோட்டார் சைக்கிளில் அலுவலகம் வருகின்றீர்களே. ஏன்?"* – என்று அவர் கேள்வி எழுப்பினார்.

*"எனக்கும் நிறுவனம் கார் தந்துள்ளது. நான் அதில் பயணிப்பது குறைவு. காரணம் உண்டு. நீங்கள் காரில் இருந்தால் 'Sitting Duck' (நொண்டி வாத்து). கொழும்பு நகரில் காரில் பயணம் செய்யும் போது இலக்கு வைக்கப்பட்டவர் யாராலும் தப்பிப் பிழைக்கவே முடியவில்லை. மோட்டார் சைக்கிள் என்றால்தான் குறைந்த பட்சம் நீங்கள் வாகன வரிசைகளுக்கு இடையில் நுழைந்து, நுழைந்து ஓடித் தப்பி விட முடியும். அல்லது மோட்டார் சைக்கிளைப் போட்டு விட்டாவது ஓட முடியும். போக்குவரத்து சமிக்ஞை விளக்குகளில் கார் போல வரிசையில் நீண்ட நேரம் காத்து நிற்கவும் தேவையில்லை. ஹெல்மெட், ஜாக்கெட்டுக்களை மாறி மாறி அணிந்து உருவ அமைப்பையும், மோட்டார் சைக்கிளையும் மாற்றுவதன் மூலம் சரியாக அடையாளப்படுத்தப்படுவதிலிருந்தும் ஓரளவு தப்பிக்கொள்ள முடியும்."* – என்றேன் நான்.

*'யெஸ்'* என்று தலையாட்டிய அவர் அடுத்த கேள்வியைத் தூக்கிப் போட்டார்.

*"ஆம். உங்கள் நண்பர் லஸந்தவின் கதை முடிந்துவிட்டது. அந்தக் கதி உங்களுக்கு நேரும் என்று நீங்கள் கருதவில்லையா? அந்த ஆபத்து உங்களுக்கு இல்லையா?"* – என்று நேரடியாகக் கேட்டார் அவர்.

நான் கலங்காமல் பதிலளித்தேன்.

*"ஆம். வீட்டில் இருந்து காலையில் புறப்பட்டால் மீண்டும் உயிருடன் வீடு மீளுவோம் என்ற நம்பிக்கை இல்லாத நிலைதான் உள்ளது. அதை உணர்கிறோம். ஆனால் என்ன நடந்தாலும் எமது இனத்துக்கு – எமது மக்களுக்கு – நாம் பொறுப்புடன் பணியாற்ற வேண்டிய முக்கிய கால கட்டம் இது. அதில் நாம் உறுதியாக இருக்கிறோம். என்ன நடந்தாலும் அதனை எதிர்கொண்டு எமது இனத்துக்கான ஊடகப் பணியைத் தொடர்வது என்ற எமது வரலாற்றுக் கடமையிலிருந்து நாம் மீளமுடியாது."* – என்று நான் பதிலளித்தேன்.

ஆஸ்திரேலிய எஸ்.பி.எஸ். தொலைக்காட்சியில் அடுத்த நாள் மாலையில் ஒளிபரப்பான அந்தப் பேட்டியை நான் பார்ப்பதற்கு சுமார் மூன்று மாதங்கள் காத்திருக்க வேண்டியதாயிற்று.

(அது அப்படியே இன்னும் You tube இல் உள்ளது)

என்னுடைய மேற்படி பதிலை தனது செய்தி அறிக்கையில் அடுத்த நாள் அப்படியே ஒளி பரப்பிய அந்தச் செய்தியாளர் தொடர்ந்து பின்வருமாறு குறிப்பிட்டார்.

*"இப்படிப் பதிலளித்த அந்தப் பத்திரிகை ஆசிரியர் நான் பேட்டி கண்ட அடுத்த நாள் (இன்று) காலையில் தலைநகர் கொழும்பில் ஒரு சாவு வீட்டில் இருந்த சமயம், பட்டப் பகலில் பல நூறு பேர் முன்னிலையில் வெள்ளை வானில் வந்த ஆயுததாரிகளினால் தாக்கப்பட்டு கடத்தப்பட்டார்.*

*அவர் கடத்தப்பட்ட செய்தி எனது கைதொலைபேசிக்கு குறுந் தகவலாக வந்தபோது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபயவைப் பேட்டி காண அவரது அலுவலக வாசலில் நான் நின்று கொண்டிருந்தேன். உள்ளே போனதும் பாதுகாப்புச் செயலாளரிடம் அது பற்றித்தான் முதல் கேள்வியை எடுத்த எடுப்பில் கேட்டேன். அவருக்குப் பற்றிக் கொண்டு வந்த கோபம் எனக்கு அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் தந்தது."* – என்று அந்தச் செய்தியறிக்கையில் ஒளிபரப்பினார் அந்தச் செய்தியாளர்.

தொடர்ந்து என்னைப் பற்றி கோட்டாபய ஆவேசத்துடன் – கோபத்துடன் – சத்தமிட்டுக் கூறுவது அந்தக் காணொலியின் செய்தி அறிக்கையில் அப்படியே இடம்பெறுகின்றது.

*"அவர் பத்திரிகையாளர் அல்லர். கொழும்பில் அப்பாவிப் பொது மக்களின் படுகொலைக்கு அவரும் காரணம். அவர் ஒரு பயங்கரவாதி. அவரைக் கைதுசெய்து விசாரிப்போம். தண்டிப்போம்." – என்று குறிப்பிட்ட கோட்டாபய, கோபத்தில் வாய் தடுமாறி இரண்டாவது தடவை குறிப்பிடும்போது "கைதுசெய்துவிட்டோம்"* என்று கூறிவிட்டார்.

காலையில் இனந்தெரியாத நபர்களினால் வெள்ளைவானில் கடத்தப்பட்டார் என இலங்கை அரசினாலும், தகவல் திணைகளத்தினாலும், பொலிஸாரினாலும் அறிவிக்கப்பட்ட பத்திரிகை ஆசிரியர், மேற்படி ஆஸ்திரேலிய தொலைக்காட்சியில் கோட்டாபயவின் பேட்டி அடங்கிய செய்தி அறிக்கை ஒளிபரப்பானதும் 'கைது' செய்யப்பட்டவரானார்.

கோட்டாவின் அந்தச் சீற்றத்தை – கோபத்தை – ஆஸ்திரேலிய தொலைக்காட்சி மட்டுமல்லாமல், உலகின் பல்வேறு செய்தி ஊடகங்களும் அப்படியே ஒளிபரப்பின. அதைக் கண்ணுற்ற தமிழர்கள் பலரும் நான் உயிருடன் மீளுவேன் என்று நம்பவே இல்லை.

ஆனாலும், தெய்வ அனுக்கிரகம், கோட்டாவினால் என்னை நீதிமன்றத்தில் 'பயங்கரவாதி' ஆக நிரூபிக்க முடியவில்லை. அவரின் கீழே பணியாற்றிய தேசியப் புலனாய்வுப் பணியகம், கொழும்புக் குற்றத் தடுப்புப் பிரிவு, பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு, இராணுவப் புலனாய்வுப் பிரிவு எல்லாமே என் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான எந்தக் குற்றச்சாட்டும் இல்லை – பத்திரிகையாளன் என்ற முறையில் புலிகள் உட்பட சகல தரப்புகளுடனும் ஊடாடியமையைத் தவிர – என்று நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தன.

அதனால், யுத்தம் முடியும் கட்டத்தில் சுமார் மூன்று மாத கால தடுப்புக்காவல் பட்டறிவுடன் நான் வெளியே வரமுடிந்தது – நண்பர் லஸந்தவுக்கு ஏற்பட்ட கதி மாதிரி ஏற்படாமல்.

ஆனாலும், அன்று ஆட்சியில் இருந்த மஹிந்த ராஜபக்ஷவுடனாகட்டும், என்னை 'பயங்கரவாதி' என்று பச்சையாகத் தொலைக் காட்சியில் திட்டித் தீர்த்த கோட்டாபயவுடனாகட்டும், அல்லது அப்போதைய இராணுவத் தளபதிகளுடனாகட்டும், அனைவருடனும் இன்றும் கூட பத்திரிகை நண்பராக என்னால் அதே நட்புடனும், மரியாதையுடனும் பழக முடியும்; பழகுகிறேன். – பத்திரிகையாளனாக விடயங்களை அணுகும்போது எனது தனிப்பட்ட பண்பியல்பு, விருப்பு–வெறுப்புகளை நான் தள்ளி வைத்து விட வேண்டு மல்லவா?

'காலைக்கதிர்' செய்திக்காக கடந்த வருடமும் கோட்டாபயவை அவரது இல்லத்தில் சந்தித்தேன். முன்னர் 'பயங்கரவாதி' என் பகிரங்கமாகத் திட்டிய மனிதர், என்னைக் கனிவோடு வரவேற்று தேனீர் தந்து உபசரித்து நீண்ட நேரம் அரசியல் பேசிக் கொண்டிருந்தார். அவரும் மாறிவிட்டார். இப்போது அவர் அரசியல்வாதியல்லவா?

**- மின்னல் -**

காலைக்கதிர் Kalaikkathir



# அரச ஊடகங்களுக்குள் அமைதியின்மை அரசியல் அழுத்தங்களே முழுக் காரணம்

## சபையில் அநுரகுமார குற்றச்சாட்டு



கொழும்பு, ஜன. 09

சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்துக்குள் தற்போது நிலவும் அமைதியின்மைக்கு அரசியல் ரீதியிலான மாற்றங்களும், அழுத்தங்களுமே காரணம் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

நேற்றுக் கூடிய புத்தாண்டின் முதலாவது நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

ஊடகத் துறையில் பாரிய செயற்பாட்டை முன்னெடுத்துவரும் சுயாதீனத் தொலைக்காட்சிக்குள் தற்போது அமைதியின்மை நிலவி வருகிறது.

நிறுவனத்தில் தற்போது அரசியல் ரீதியில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்கள், அழுத்தங்களே இதற்குக் காரணம். இதனால் ஊழியர்கள் அச்சமடைந்துள்ளனர். அரச தொலைக் காட்சிகள் கடந்த காலத்தில் தவறாக நடத்தப்பட்டதால் பாரிய நட்டம் ஏற்பட்டது.

ஆட்சி மாற்றத்துடன் ஊழியர் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் ஊழியர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். பிரதிப் பொது முகாமையாளர் சேர்ப்பில் அங்கு உள்ளவர்களைப் புறந்தள்ளி, அரசியல் ரீதியில் பிரதிப் பொது முகாமையாளர் பதவி வழங்கப்பட் டுள்ளதாகக் குற்றச்சாட்டப்பட்டுள்ளது.

உள்ளகப் பதவிக்கு வெளியார் தலையிடுவது நல்லதல்ல. அனைத்து பதவிகளுக்கும் முறையான ரீதியில் ஆட்சேர்ப்பு இடம் பெறவேண்டும்–என்றார்.

## மைத்திரிபால-சந்திரிகா நேருக்கு நேர் சந்திப்பு!



கொழும்பு, ஜன. 09

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோர் நேற்று நேருக்கு நேர் சந்தித்துக்கொண்டனர்.

இலங்கையின் முன்னாள் பிரதமர்களுள் ஒருவரும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகருமான எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் 120 ஆவது நினைவு தினம் நேற்று காலிமுகத் திடலிலுள்ள பண்டாரநாயக்க நினைவுத் தூபிக்கு முன்னால் இடம்பெற்றது.

இதன்போது அமரர் பண்டாரநாயக்கவின் சிலைக்கு சுதந்திரக் கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோர் மலர் மாலை அணிவித்தனர்.

இதன்போது ஜனாதிபதி மற்றும் முன்னாள் ஜனாதிபதி ஆகியோருக்கிடையில் கருத்து பரிமாறல்கள் எதுவும் இடம்பெறவில்லை. மலர் மாலை அணிவிக்கும் நிகழ்வு முடிந்தவுடன் ஜனாதிபதி உடனடியாக அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

எனினும் இந்த நிகழ்வில் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோருக்கிடையில் நீண்ட கருத்து பரிமாறல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ஸ்ரூடியோவுக்குள் நுழைந்த பிக்கு ஊழியர்களுக்கு கடும் அச்சுறுத்தல்

### மட்டக்களப்பில் நேற்றுச் சம்பவம்




மட்டக்களப்பு, ஜன. 09

மட்டக்களப்பில் அமைந்துள்ள ஸ்ரூடியோ ஒன்றுக்குள் நுழைந்த பிக்கு ஒருவர், கடையில் தொழில் புரியும் ஊழியர்களை அச்சுறுத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுச் செவ்வாய்க் கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

அந்தப் பிக்கு, ஸ்ரூடியோவில் காட்சிப் படுத்தப்பட்டிருந்த குழந்தை ஒன்றின் புகைப் படத்தைக் காட்டி இது யாருடையது, இது எனது சிறிய வயதுப் புகைப்படம். இதை ஏன் நீங்கள் காட்சிப்படுத்த வேண்டும், இதற்கு விலை 125 ரூபாயா? எனப் பல கேள்விகளை எழுப்பியுள்ளார்.

அத்தோடு தான் மனித உரிமை ஆணைக் குழுவுக்கு போகப்போகிறேன் என்றும் தெரிவித்து கடையில் தொழில் புரியும் ஊழியர்களை அச்சுறுத்தியதுடன், அந்தப் பகுதியில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்.

வீதியில் நின்றவர்கள் பிக்குவை மறித்து, நீங்கள் எங்கிருந்து வந்துள்ளீர்கள் என வினவியுள்ளனர். நான் மட்டக்களப்பைச் சுற்றிப்பார்க்க வந்துள்ளேன் எனத் தெரிவித்த அந்தப் பிக்கு, அங்கிருந்து வெளியேறிச் சென்றுள்ளார்.

இந்நிலையில் இவ்விடயம் குறித்து 119 என்ற பொலிஸ் அவசர பிரிவுக்கு அந்தக் கடை ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

தகவலறிந்து அவ்விடத்துக்கு பொலிஸார் வருவதற்கு முன்னர் பிக்கு மட்டக்களப்பு ரயில் நிலையப் பகுதி நோக்கிச் சென்றார் எனக் கடை ஊழியர்கள் தெரிவித்தனர். (ஐ)

## சகல தரப்புகளுடனும் இணைந்து வடக்கை அபிவிருத்தி செய்வேன்

### கூறுன்கிறார் புதிய ஆளுநர் ராகவன்



கொழும்பு, ஜன. 09

அனைத்துத் தரப்புக்களுடனும் இணைந்து வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்யப் போவதாக வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

வடக்கின் ஆளுநராகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட பின்னர் கருத்து வெளியிட்டுள்ள அவர், என் மீதான நம்பிக்கையின் அடிப்படையில் ஜனாதிபதி இந்தப் பொறுப்பை என்னிடம் கொடுத்துள்ளார். இதன் காரணமாக மாகாணங்களுக்கு இடையில் வேறுபாடுகள் இன்றி ஒரு சேவகனாகப் பணியாற்றுவதே எனது நோக்கம்.

முழு இலங்கை மக்களின் அபிவிருத்தி, ஒற்றுமைக்காகப் பாடுபட வேண்டிய தேவை எனக்குள்ளது. வடக்கு மாகாணம் என்பது தனிப்பட்ட பகுதியல்ல. எனினும் அங்கு பல்வேறு பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளன. முன்னாள் ஆளுநர் மேற்கொண்ட பணி தொடர்ந்தும் முன்னெடுக்கப் படும். அந்தப் பகுதியிலுள்ள அரசியல் தலைவர்களுடன் கலந்துரையாடி அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்–என்றார். (ஐ)

## மடுவில் வீடுவீடாக நிதி வசூலித்த 4 சிங்களவர்கள் நையப்புடைப்பு!



மன்னார், ஜன. 09

மன்னார் – மடு, பெரிய பண்டிவிரிச்சான் பகுதியில் தமிழ் மக்களின் வீடுகளுக்குச் சென்று பணம் வசூலித்த அனுராதபுரத்தைச் சேர்ந்த சிங்கள இளைஞர்கள் நால்வரை நேற்று முன்தினம் அப்பகுதி மக்கள் பிடித்து நையப்புடைத்தனர்.

பெரியபண்டிவிரிச்சான் பகுதியில் உள்ள வீடுகளுக்குச் சென்று ஆதரவற்ற குழந்தைகளுக்கு நிதி திரட்டுவதாகக் கூறி, சில தமிழ் மக்களை மிரட்டியும் அந்த நபர்கள் நிதி வசூலித்துள்ளனர்.

தாங்கள் அனுராதபுரம் எனத் தங்களை அடையாளப் படுத்திக் கொண்ட சிங்கள இளைஞர்கள் நால்வர் மீதும் சந்தேகமடைந்த அப்பகுதி மக்கள் அவர்களைத் துரத்திப் பிடித்து நையப்புடைத்துள்ளனர்.

சம்பவத்தை அறிந்து சம்பவ இடத்துக்குச் சென்ற அப்பகுதி கிராம அலுவலர் நடந்த சம்பவத்தைக் கேட்டறிந்ததுடன், மடுப் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்ததையடுத்து விரைந்து சென்ற பொலிஸார் அவர்களைக் காப்பாற்றும் விதமாகச் செயற்பட்டதுடன் தமிழ் மக்களை அச்சுறுத்தும் வகையிலும் நடந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கட்டடத்தில் இருந்து விழுந்த பெண் சாவு

கொழும்பு, ஜன. 09

குருநாகல் மத்திய பஸ்நிலையத்தின் இரண்டு மாடிக் கட்டடத்திலிருந்து கீழே விழுந்து பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது.

குருணாகல் - தோரயாய பிரதேசத்தைச் சேர்ந்த, 32 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தப் பெண் சில நாட்களாக மனநலம் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டதாக அவரது உறவினர்கள் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குருநாகல் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)



காலைக்கதிர்
Kalaikkathir



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மைத்திரியின் நான்கு ஆண்டுகள்

இலங்கையின் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன பதவியேற்று இன்றுடன் நான்கு ஆண்டுகளாகின்றன.

முதல்நாள் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று, 2015 ஜனவரி 09 ஆம் திகதி இந்த நாட்டின் நம்பிக்கை நட்சத்திரமாக மைத்திரிபால சிறிசேன பதவியேற்ற போது இருந்த காலமும், சூழலும், நிலைமையும் வேறு. இன்றுள்ள சூழல் வேறு.

சாதாரண கட்சி அரசியலைக் கடந்து, இந்த நாட்டில் அமைதியான, சுபீட்சமான, இணக்கமான எதிர்காலத்துக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றும் ஒரு புதிய தலைவராக அவர் உயருவார் என்ற எதிர்பார்ப்புடன்தான் இனம், மொழி, மதம் கடந்து இத்தீவின் மக்கள் ஒன்றிணைந்து வாக்களித்து அவரை ஜனாதிபதியாக்கினார்கள்.

மிக மோசமான – அராஜக – எதேச்சாதிகார – ஆட்சிப் பீடமாக இருந்த ராஜபக்ஷக்களின் கொடுங்கோன்மையை முறியடிப்பதற்கான புதிய விடிவெள்ளியாக அவரை இலங்கைத் தீவு கருதியது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான சுதந்திரக் கட்சி அவருக்கு எதிராக அந்த ஜனாதிபதித் தேர்தலில் வீறுகொண்டெழுந்தபோது, மற்றைய பிரதான எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட்ட சிறுபான்மையினரின் கட்சிகளும் அவருக்கு மிகப் பெரும் காவலரணாக நின்றன.

மைத்திரிபால சிறிசேனவே எதிர்பாராத – நம்ப முடியாத – பெரு வெற்றியை இந்த நாட்டு மக்கள் அவருக்கு வழங்கினர்.

ஆனால் எல்லாம் இன்று விழலுக்கு இறைத்த நீராகி, வீணாய்ப் போயிருப்பதுதான் இந்த நாட்டின் துரதிஷ்டம்.

நீண்டகாலம் இந்தத் தீவை பெரும் அவலத்துக்குள்ளாக்கி வரும் தேசிய இனப்பிரச்சினைக்கு நின்று, நிலைத்து, நீடிக்கக்கூடிய ஒரு நியாயமான தீர்வைக் காணுவது உட்பட ஒரு புதிய அரசியல் கலாசாரத்தைக் கட்டி எழுப்புவதற்கான 'நாயகனாக' இந்த நாட்டு மக்கள் மைத்திரிபால சிறிசேனவை அடையாளம் கண்டு அவருக்கு வாக்களித்தனர்.

ஆனால், அவரோ அவற்றை எல்லாம் மண்ணாக்கிவிட்டு, தம்மை மூன்றாம் தர அரசியல்வாதியாக நிரூபித்து நிற்கின்றார்.

தமது ஜனாதிபதி பதவிக் காலத்தில் அவர் எடுத்து வைத்த இரண்டு அடிகளே அவரை சீர்பெற வேண்டிய தலைவரிலிருந்து, சீர்கெட்ட தலைவர் நிலைக்குத் தள்ளிவிட்டன என்று கருதுகின்றோம்.

முதலாவது – கட்சி சார்ந்த நிலைப்பாட்டில் அவர் தம்மை மீண்டும் பிணைத்துக் கொண்ட தவறு.

2014 இறுதியில் தாம் அதுவரை வகித்து வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியைத் தூக்கி எறிந்துவிட்டு வந்து, ஐக்கிய தேசியக் கட்சி உட்பட்ட அப்போதைய கூட்டு எதிரணியின் வேட்பாளராக அன்னச் சின்னத்திலேயே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார் அவர். அதுவும் சுதந்திரக் கட்சியின் உத்தியோகபூர்வ வேட்பாளரான அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகவே அத்தேர்தலில் அவர் நின்றார்.

எதிரணியின் வேட்பாளராக நின்று வெற்றி பெற்ற மைத்திரிபால சிறிசேன, அதன் மூலம் கிடைத்த ஜனாதிபதிப் பதவியை வைத்துக் கொண்டு சுதந்திரக் கட்சியின் தலைமையைக் கைப்பற்றி அதன் தலைவராகியமை அவர் செய்த முதல் அரசியல் அணுகுமுறைத் தவறு. அது அரசியல் அநாகரிகமும் கூட.

புதிய ஜனாதிபதியின் வாலில் தொங்கினால் அவரின் கீழான புதிய அரசில் பதவிகளைப் பெறலாம் என்ற சு.கவினரின் பதவி ஆசையும் மைத்திரிபால சிறிசேனவுக்கு இது விடயத்தில் சாதகமான ஒன்றாக அமைந்துவிட்டது.

கட்சி கடந்து நின்றமையினால் ஜனாதிபதியானவர், மீண்டும் கட்சி அரசியலுக்குள் தம்மைச் சிக்க வைத்து அரசியல் சிறுமைத்தனத்துக்குள் மாட்டிக் கொண்டார்.

ஒரே ஒரு தடவை மட்டுமே ஜனாதிபதியாக இருப்பேன் என்று நாட்டுக்கும் மக்களுக்கும் வாக்குறுதி அளித்துப் பதவிக்கு வந்த மைத்திரிபால சிறிசேனவுக்கு மீண்டும் பதவியில் தொடர வேண்டும் என்ற பதவியாசை – நப்பாசை – பேயாய்ப் பற்றிக் கொண்டது. அந்தச் சாகரத்தில் அவர் விழுந்தமை அவரது இரண்டாவது பெரும் அரசியல் தவறாகும்.

அந்தப் பேரவாவை – நப்பாசையை – எட்டுவதற்காக சேராத இடம் தன்னில் சேரும் தவறையும் அவர் இழைத்தார்.

இதனால் –

இந்த நாட்டின் தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான – நியாயமான – இணக்கத் தீர்வைக் காணும் வரலாற்று வாய்ப்பையையும் சிதறடித்து –

பெரும்பாலும் எல்லாத் தரப்புக்களினாலும் நிராகரிக்கப்பட்ட அரசியல் அநாதை போன்ற நிலையில் நிற்கும அவலம் அவருக்கு ஏற்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியின் தலைமையையும் அவாப்பட்டு பறித்துக் கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதன் மூலம் தம்மையும் சிறுமைப்படுத்தி, அந்தக் கட்சியையும் சிதறடித்து, எல்லாவற்றையும் சீர்கெடுத்தமைதான் மிச்சம்.

# வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட முல்லை மாணவர்களுக்கு உதவி



முல்லைத்தீவு, ஜன. 09

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான உதவி வழங்கும் நிகழ்வு சுதந்திரபுரம் தமிழ் வித்தியாலயத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

பாதுகாப்பு அமைச்சு, இலங்கைப் படையினர், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தினர், டயலொக் தொலைத்தொடர்பு நிறுவனத்துடன் இணைந்து 'உங்கள் மறுமலர்ச்சிக்கு நாம்' என்ற தொனிப்பொருளில் வடக்கில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களை வழங்கி வருகின்றனர்.

வடக்கில் கடந்த மாதம் ஏற்பட்ட வெள்ள இடரால் 15ஆயிரத்து 100 மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக புள்ளிவிவரம் தெரிவிக்கிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு சுதந்திரபுரம் தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் 68ஆவது படைப்பிரிவின் தளபதி பிரிகேடியர் அருண ஆரியசிங்க , கிளிநொச்சி -முல்லைத்தீவு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஹிந்த குணரத்ன, மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ம.பிரதீபன், மாவட்ட அனர்த்த முகாமைத்து உதவிப் பணிப்பாளர் எஸ்.லிங்கேஸ்வரகுமார், முல்லைவலயக் கல்விப் பணிப்பாளர் உமாநிதி புவனேஸ்வரன், புதுக்குடியிருப்பு கோட்டக் கல்வி அதிகாரி எஸ். சுப்பிரமணி யேஸ்வரன், டயலொக் தொலைத் தொடர்பு நிறுவனத்தின் வட பிராந்தியப் பணிப்பாளர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

(ஐ)

# 13 முதிரைமரக் குற்றிகளுடன் ஹன்ரரை கைப்பற்றிய வனவளத்துறை அதிகாரிகள்



முல்லைத்தீவு மாவட்டத்தில் காடழிப்பும் மரக்கடத்தலும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. தொடர்ச்சியாக பொலிஸாரும் வனவள அதிகாரி களும் தமது நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற போதும் மரக் கடத்தல், காடழிப்பு என்பன குறைவதாக இல்லை.

புதுக்குடியிருப்பு பகுதி வன அதிகாரிகள் நேற்று முன்தினமும் 13 முதிரை மரக் குற்றிகளுடன் ஹன்ரர் வாகனம் ஒன்றைக் கைப்பற்றியுள்ளனர்.

மன்னாகண்டல் பகுதியில் மரக்கடத்தல் இடம் பெற்று வருவதாக கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவல் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்ட வனஅதிகாரி ஆர்.ஏ.சி.டி. ரணசிங்கவின் ஆலோச னைக்கு அமைவாக புதுக்குடியிருப்பு வன அதிகாரிகளான சந்திரசிறி, முரு தாஸ, ஜெயசிங்க, தேவதீபன் ஆகியோர் கொண்ட குழு இந்த நடவடிக்கையை மேற்கொண்டது

நேற்று முன் தினம் பிற்பகல் 2 மணிமுதல் வனத்தில் தங்கியிருந்து சுற்றவர உமி மூடைகளை அடுக்கி நடுவில் மரக் குற்றிகளைக் கடத் தும் சூட்சுமமான கடத்தலை இந்தக் குழுவினர் முறியடித்துள்ளனர்.

வாகனச் சாரதி தப்பியோடிய நிலையில் கைப்பற்றப்பட்ட ஹன்ரர் வாகனத்தையும் 13 முதிரை மரக் குற்றிகளையும் நீதிமன்றில் முற்படுத்த வுள்ளதாக புதுக்குடியிருப்புப் பகுதி வன அதிகாரிகள் கூறினர்.

# கடந்த ஆண்டு யாழ்.மாவட்டத்தில் மட்டும் 303 காச நோயாளர் இனம் காணப்பட்டனர்

யாழ். மாவட்டத்தில் 2018 ஆம் ஆண்டு 303 காசநோயாளர்கள் இனங்காணப்பட்டனர். இவர்களில் 120 பேருக்கு 6 மாதங்கள் சிகிச்சையளிக்கப்பட்டு அவர்கள் குணமடைந்துள்ளனர். 6 பேர் காசநோயினால் இறந்துள்ளனர். ஏனையவர்களுக்குத் தொடர்ந்து சிகிச்சையளிக்கப்படுகின்றது.

மருத்துக்கு எதிர்ப்புத் தன்மை உடைய காசநோயாளி ஒருவருக்கும் தொடர் சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

மைக்கோ பற்றீரியம் அல்லாக் காச நோய்த் தொற்றுடைய நோயாளிகள் 15 பேர் இனம் காணப்பட்டனர்.

யாழ் மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி மருத்துவர் சி.யமுனானந்தா இந்தத் தகவல்களைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

காசநோயினைக் கண்டறிவதற்கு நோய் அறிகுறி உடையவர்களிலும் நோயாளிகளுடன் தொடர்பு உடையவர்களிலும் நெஞ்சு ஊடுகதிர்ப் பரிசோதனை, நுணுக்குக்காட்டியூடான சளிப்பரிசோதனை, மூலக்கூற்றுத் தொழில் நுட்பத்திலான சளிப் பரிசோதனை, தோல் ஒவ்வாமைச் சோதனை, சளி வளர்ப்பு முறை என்பன யாழ் மார்பு நோய்ச்சிகிச்சை நிலையத்தில் தினமும் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த வருடம் யாழ் மாவட்டத்தில் தினமும் ஒருவர் காச நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று உள்ளனர். சுமார் 50 காசநோயாளிகள் இனம் காணமுடியாது தவறிவிடப்பட்டுள்ளனர். தனியார் வைத்தியசாலைகளிலும் காசநோய்க்கான அடிப்படைச் சோதனைகள் மேற்கொள்ளப்படின் இவ்வாறு தவறிவிடப்படும் நோயாளிகளையும் கண்டறியலாம்.

மேலும் யாழ் மாவட்டத்தில் காச நோயாளிகளுக்கான சளிப்பரிசோதனைகள் மார்பு நோய்ச் சிகிச்சை நிலையத்தில் மட்டுமல்லாது, ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை, சங்கானை பிரதேச வைத்தியசாலை, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை ஆகிய இடங்களிலும் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும் மார்பு நோய்ச்சிகிச்சை நிலையத்தில் புதிதாக இலக்கமிட்ட ஊடுருவிக்கருவி இவ்வருடம் பாவனைக்கு வரும். இதனால் இதுவரை காலமும் நெஞ்சு ஊடுகதிர் படம் எடுப்பதில் இருந்த தடங்கல்கள் இல்லாது போகும். – என்றார் அவர்.

## நாளை

10.01.2019
வியாழக்கிழமை

நட்சத்திரம் : சதயம் பி.இ 4.14 வரை
திதி : சதுர்த்தி பி.ப 3.42 வரை
சுபநேரம் : 8.03 - 9.33 வரை
இராகுகாலம் : 2.03 - 3.33 வரை

காலைக்கதிர்
Kalaikkathir



# அனுமதியின்றி பறந்து சென்ற விமானத்தால் பெரும் சர்ச்சை!

## உடனடி விசாரணைகள் நடத்துமாறு சிவில் சமூக அமைப்புகள் வலியுறுத்து



கொழும்பு, ஜன.09

திருகோணமலை–சீனக்குடா விமானப்படைத் தளத்தில் இருந்து, கடந்த ஞாயிறு சிங்கப்பூருக்கு தனியார் ஜெட் விமானம் ஒன்று உரிய அனுமதியின்றிப் புறப்பட்டுச் சென்றமை தொடர்பாக விசாரணைகளை நடத்துமாறு சிவில் சமூக அமைப்புகள் கோரியுள்ளன.

சீனா, சிங்கப்பூர், ஹொங்கொங் நாடுகளைச் சேர்ந்த ஐந்து முதலீட்டாளர்கள் கடந்த 3ஆம் திகதி தனி ஜெட் விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கினர்.

இவர்கள், கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் றோஹித போகொல்லாகமவின் உதவியுடன், கட்டுநாயக்கவில் இருந்து தாம் வந்த விமானத்திலேயே சீனக்குடா விமானப்படைத் தளத்தில் சென்று தரையிறங்கினர்.

கிழக்கு மாகாண ஆளுநராக இருந்த றோஹித போகொல்லாகம உள்ளிட்ட தரப்புகளுடன் பேச்சுக்களை நடத்திவிட்டு கடந்த ஞாயிறு சீனக்குடா விமானப்படைத் தளத்தில் இருந்தே, சிங்கப்பூருக்கு அந்த ஜெட் விமானத்தில் புறப்பட்டுச் சென்றனர்.

அங்கீகரிக்கப்பட்டாத விமான நிலையத்தில் இருந்து, சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டங்கள் மற்றும் குடிவரவுச் சட்டங்களை மீறி, அந்த விமானம் புறப்பட்டுச் செல்வதற்கு யார் அனுமதி அளித்தது என்றும்,

கிழக்கின் முன்னாள் ஆளுநருடன் இந்த முதலீட்டாளர்கள் நடத்திய பேச்சுக்கள் குறித்தும் சந்தேகங்கள் எழுந்துள்ளன.

றோஹித போகொல்லாகம மற்றும் அவரது மகனுடன் சிங்கப்பூர் முதலீட்டாளர்கள் பேச்சு நடத்தியமை குறித்து கேள்விகளை எழுப்பியுள்ள சிவில் சமூகச் செயற்பட்டாளர்கள்,

உரிய அனுமதியின்றி ஜெட் விமானம் சீனக்குடாவில் இருந்து புறப்பட்டுச் சென்றமை தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

அதேவேளை, சீனக்குடா விமானப்படைத் தளத்தில் தரையிறங்குவதற்குப் பாதுகாப்பு அமைச்சே அனுமதி அளித்திருந்தது.

எனினும், சிவில் விமானப் போக்குவரத்துத்துறையின் அனுமதி ஏதும் பெறப்படவில்லை என்று கூறப்படுகிறது. இந்த நிலையில் சிவில் விமானப் போக்குவரத்துத் துறை இது குறித்து விசாரணைகளை நடத்தும் என்று போக்குவரத்து மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

# பயணிகளுக்கு ஆப்பு வைக்கும் பஸ்களை சுற்றிவளைக்க 'பொறி'

கொழும்பு, ஜன. 09

பஸ் கட்டணங்கள், நான்கு வீதத்தால் குறைக்கப்பட்டுள்ள நிலையில், அந்த பஸ் கட்டணங்களுக்கு மேலதிகமாகக் கட்டணங்களை அறவிடும் பஸ்களைச் சுற்றிவளைப்பதற்கான விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அரச மற்றும் தனியார் பஸ் சேவைகள் அனைத்துக்கும், புதிய பஸ் கட்டணங்கள் தொடர்பில் அறிவிக்கப்பட்டள்ளது.

இதற்கமைய சாதாரண, அரைச் சொகுசு, சொகுசு, அதி சொகுசு என, அனைத்து பஸ் சேவைகளுக்கும் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், புதிய பஸ் கட்டணங்கள் திருத்தத்திற்கு அமைய, 965 ரூபாவாகக் காணப்பட்ட அதிகூடிய கட்டணம் 924 ரூபா வரை குறைக்கப்பட்டுள்ளது.

எனவே, புதிய பஸ் கட்டணங்களுக்கு மேலதிகமாக கட்டணங்களை அறவிடும் பஸ்களைச் சுற்றிவளைப்பதற்கான விசேட நடவடிக்கைகள், முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

புதிய பஸ் கட்டணங்கள் திருத்தத்துக்கான அறிவித்தல், அனைத்து பஸ்களிலும் காட்சிப்படுத்தப்படுவது அவசியம் எனவும், இவ்வாறு காட்சிப்படுத்தப்படாமல் இருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும் எனவும், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் எம்.ஏ.பீ. ஹேமச்சந்திர சுட்டிக்காட்டியுள்ளார்.

எரிபொருளின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, இதன் பயனை பொதுமக்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் வகையில், பஸ், ஓட்டோ மற்றும் பாடசாலை வான் ஆகியவற்றின் கட்டணங்களைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# மஹிந்தவைச் சம்பூரில் போரை தொடங்க வைத்தது நாங்களே!

## சம்பிக்க ரணவக்க பெருமிதம்

கொழும்பு, ஜன. 09

சம்பூர் யுத்தத்தை ஆரம்பிக்குமாறு, மஹிந்தவுக்கு நாங்களே அழுத்தம் கொடுத்தோம் என்று பெருநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, தெரிவித்துள்ளார். கொலன்னாவையில் முன்னெடுக்கப்பட்ட கால்வாய் வேலைத் திட்டத்தால், வீடுகளை இழந்தவர்களுக்கு நிரந்தர வீடுகளை நிர்மாணித்துக் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த சு.ப.தமிழ்ச் செல்வனின் தொலைபேசி அழைப்புகளுக்கேற்ற தாளத்துக்கு ஆடிய அரசியல்வாதிகள் அன்றிருந்தனர். இன்று அவ்வாறானதொரு நிலைமை இல்லை.பயங்கரவாதத்துக்கு எதிராக நாங்கள் செயற்பட்டமையால், வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனால் எம்மைத் தூற்றக் கூடிய சுதந்திரம் கிடைத்துள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ, 2005ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பின்னர், பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு முயற்சிக்கவில்லை. பிரபாகரனுடன் நேரடியாகப் பேச்சு நடத்துவதற்கே முயன்றார். நாட்டின் ஒற்றையாட்சிக்கு எவ்விதமான பங்கமும் ஏற்படாது. அதற்கேற்ற வகையில் அரசமைப்பில் திருத்தங்களும் மேற்கொள்ளப்படாது எனும் இணக்கப்பாடு மட்டுமே எங்கள் இரு தரப்பிடமும் இருந்தது.

மஹிந்த ராஜபக்ஷ, செயற்பாடுகளில் நாங்கள் அதிருப்தியுற்றிருந்த காலமொன்றிருந்தது. எனினும், பயங்கரவாதத்தைத் தோற்கடித்துக் காண்பித்தோம். அவர் தன்னுடைய குடும்பம், தனது பாதுகாப்பு ஆகியனவற்றுக்காக, பயங்கரவாதிகளுக்குக் கப்பம் கொடுத்து, நிதியளிப்புகளைச் செய்தமையை நாம் நன்கறிவோம். அதனால்தான், சம்பூர் யுத்தத்தை ஆரம்பிக்குமாறு, மஹிந்தவுக்கு நாங்கள் அழுத்தம் கொடுத்தோம் .

அதன்பின்னர் நாங்கள் எதனையும் மஹிந்தவுக்குக் கூறவில்லை. மஹிந்தவுக்கு மிகவும் அருகிலிருந்தவர்கள் அதற்கு விரும்பவில்லை. எனினும், பயங்கரவாதம் கொஞ்சம் கொஞ்சமாகத் தோற்கடிக்கப்பட்டது. அந்தப் பெறுபேறு, இன்று யாருக்குக் கிடைத்துள்ளது?, பங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டதன் சுதந்திரத்தை, வடக்கு மக்களே இன்று கூடுதலாக அனுபவிக்கின்றனர்.

வடக்கில், யுத்த காலத்தில், சீமெந்து மூடையின் விலை, அரிசி விலை, மண்ணெண்ணெய் லீற்றரின் விலைக்கும் தற்போதைய விலைக்கும் இடையில் ஒப்பிட்டுப் பார்த்தால், மக்களுக்குக் கிடைத்துள்ள ஜனநாயக உரிமையைக் கண்கூடாகப் பார்க்கமுடியும்.

தமிழ்ச் செல்வனின் தொலைபேசித் தாளத்துக்கு ஆடிய அரசியலே, வடக்கில் அன்றிருந்தது.

எனினும், தங்களுடைய அரசியல் இயக்கத்தில், பேரணி செல்வதற்கும், அரசியல் கருத்துகளை வெளிப்படுத்துவதற்கும், எங்களைத் தூற்றுவதற்கும், ஜனநாயகத்துக்காக அர்ப்பணித்துப் போராடுவதற்கும் சி.வி.விக்னேஸ்வரனுக்குச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்றால், அது பயங்கரவாதத்துக்கு எதிரான எங்களுடைய செயற்பாட்டினால் ஆகும் .

மஹிந்தவின் காலத்தில் சமூகத்துக்குச் சுதந்திரம் கிடைத்தமையால், ஜனநாயகத்துக்காக சகலருக்கும் குரல் கொடுக்கக்கூடிய சந்தர்ப்பம் கிட்டியுள்ளது. மஹிந்த கூறுவதற்கெல்லாம் நாங்கள் தலையை ஆட்டிக்கொண்டிருக்கவில்லை.

மஹிந்த ராஜபக்ஷ, தன்னுடைய மற்றும் தன்னுடைய குடும்பத்தினரின் இரத்தம் மட்டுமே, நாட்டின் இரத்தமென நினைத்து செயற்பட்டுக் கொண்டிருக்கையில், அவருடைய ஜனநாயகத்துக்கு எதிரான செயற்பாட்டுக்கு எதிராகக் குரல் கொடுத்தோம். ராஜபக்ஷர்களை யாராலுமே தோல்வியுறச் செய்யமுடியாது என்ற நம்பிக்கையூட்டப்பட்டிருந்த காலத்தில், மஹிந்த ராஜபக்ஷவைத் தோற்கடிப்பதற்கான செயற்பாட்டை முன்னெடுத்தோம்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த முன்னணி உறுப்பினர்கள், 2005ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக இருக்கவில்லை. ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியான முதலாவது நாளன்றே, ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற்றிருந்தார். மஹிந்த ராஜபக்ஷ, வெற்றி பெறுவாரென, அவருடைய குடும்ப அங்கத்தவர்கள் கூட நினைத்திருக்கவில்லை. ஜே.வி.பி மட்டுமே, மஹிந்தவுக்குப் பின்னால் இருந்தது. மஹிந்த வெற்றி பெற்றதன் பின்னர், கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்டவர்கள் வெளிநாட்டிலிருந்து வந்து சேர்ந்துகொண்டனர் .

அதேபோல, மைத்திரிபால சிறிசேனவும், ஜனாதிபதியானதன் பின்னர், தன்னுடைய செயற்பாட்டில் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றத்தைக் காண்பித்தார். அவரைச் சரியான பாதைக்குள் கொண்டுவரவேண்டிய தேவை எங்களுக்கு ஏற்பட்டது. கடந்த ஒன்றரை தசாப்தங்களாக, பிரபாகரன், மஹிந்த மற்றும் மைத்திரி ஆகியோரின் நீதிக்கு எதிராகப் போராடினோம். ஆயுதப் போராட்டத்துக்கு எதிராக இருந்தாலும் சரி, ஏனைய போராட்டங்களுக்கு ஆதரவாக இருந்தாலும் சரி, அவற்றுக்கெல்லாம் நாங்கள் உந்துசக்தியாக இருக்கிறோம் என்பதற்காக நாங்கள் பெருமைப்படுகின்றோம்–என்றார். (ஐ)

# சிவசேனை சுவரொட்டிகளால் மன்னார் நகரில் பதற்ற நிலை!




மன்னார், ஜன. 09

மன்னார் நகரின் மத்திய பகுதியில் மக்கள் அதிகளவில் நடமாடும் பகுதிகளில், சிவசேனை அமைப்பினால், ஒட்டப்பட்டுள்ள மத நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும்வகையிலான சுவரொட்டிகளால் சர்ச்சை எழுந்துள்ளது.

இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மக்கள் நகரங்களில் மன்னார் முக்கியமானது. இங்கு ஒற்றுமையைச் சீர்குலைக்கும் வகையில் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

கடந்த ஞாயிறு நள்ளிரவு மன்னார் நகரின் மத்திய பகுதிகளில் மன்னார் பொது விளையாட்டரங்கு எனச் சில பகுதிகளில் 'சிவ பூமி மதம் மாற்றிகள் நுழையாதீர்கள்' என மத ரீதியான அடையாளப்படுத்தப்பட்ட சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. இந்தச் சுவரொட்டிகள் தொடர்பாகவோ ஒட்டியவர்கள் தொடர்பாகவோ இதுவரை எந்தத் தகவல்களும் கிடைக்கவில்லை. (ஐ)

★ கௌரவர்கள் 'டெஸ்ட் டியூப்' குழந்தைகளா?
★ இராவணனிடம் விமானங்கள் இருந்தனவா?

# போலி அறிவியலைப் பிரபலப்படுத்துவதற்கு ஆந்திரப் பல்கலைத் துணைவேந்தர் முயற்சி

## சீறுகிறது இந்திய மக்கள் அறிவியல் கூட்டமைப்பு



ஆந்திரப் பல்கலை. துணைவேந்தர் டாக்டர் ஜி. நாகேஷ்வர ராவ்.

போலி அறிவியலைப் பிரபலப்படுத்திய ஆந்திரப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் ஜி. நாகேஷ்வர ராவ் தன் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்று அகில இந்திய மக்கள் அறிவியல் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அகில இந்திய மக்கள் அறிவியல் கூட்டமைப்பின் தலைவர் டாக்டர் எஸ்.சாட்டர்ஜி, பொதுச் செயலாளர் பேராசிரியர் பொ.ராஜமாணிக்கம், பொருளாளர் டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி ஆகியோர் இணைந்து கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் –

"தற்போது ஜனவரி 3 ஆம் திகதி முதல் ஜலந்தரில் நடந்து கொண்டிருக்கும் இந்திய அறிவியல் மாநாட்டின் ஒரு நிகழ்வில் மிகப்பெரிய போலி அறிவியல் பிரச்சாரம் நடந்திருப்பது இந்திய அறிவியலுக்கு மிகப் பெரிய அவமானத்தைத் தரக் கூடிய தாக அமைந்துள்ளது.

குறிப்பாக ஆந்திரப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் ஜி. நாகேஸ்வரராவ், (மகாபாரத) கௌரவர்கள் டெஸ்ட் டியூப் குழந்தைகள் என்றும் இராவணன் பல்வகையான விமானங்கள் வைத்திருந்தார் எனவும் இலங்கையில் பல விமான நிலையங்கள் இருந்தன எனவும் இவையனைத்தும் இந்தியாவின் தொன்மை அறிவியலுக்கான பெருமைமிகு சான்றுகள் எனவும் கூறியுள்ளார்.

இதுபோன்ற போலிஅறிவியல் கருத்துகளை ஏற்கெனவே இந்தியப் பிரதமர் முதல் பிற அமைச்சர்களும் பேசிக் கொண்டே இருக்கின்றனர். இப்பிரச்சாரத்தை அவர்களின் மதவாத அரசியலுக்குப் பயன்படுத்தி வருகின்றனர்.

ஆனால் பல ஆய்வறிஞர்களை உருவாக்கியவரும் பல ஆய்வுக் கட்டுரைகளுக்கு தேர்வாளராகவும் பல ஆராய்ச்சிகளுக்குத் தலைவராகவும் செயல்பட்டுவரும் தலைசிறந்த ஆந்திரப் பல்கலைக்கழகத்தின துணைவேந்தர் போலி அறிவியலை முன்னிறுத்தி குழந்தைகளிடம் பேசியமை வேதனைக்குரியது.

குறிப்பாக குழந்தை விஞ்ஞானிகள் மத்தியில் ஆந்திரப் பல்கலைக்கழகத்துணைவேந்தர் டாக்டர் ஜி. நாகேஷ்வர ராவ் இப்படிப் பேசியிருக்கின்றமை கண்டனத்துக்குரியதாகும். இந்த குழந்தை விஞ்ஞானிகள் கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாகக் கள அளவில் அறிவியல் வழிமுறையில் ஆய்வு செய்து, புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கி, பல மட்டங்களில் தேர்வு பெற்று, அகில இந்திய மாநாட்டிற்கு வந்தவர்கள் ஆவர். அவர்களின் அறிவியல் சிந்தனைகளை முடமாக்கும் போலி அறிவியலைப் பிரபலப்படுத்திய துணைவேந்தர் தார்மீக ரீதியாகப் பதவியை ராஜினமாச் செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம். அல்லது ஆந்திராவின் வேந்தரான ஆளுநர் அவரைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும்.

மேலும், இது போன்ற போலி அறிவியல் கருத்துகள் கொண்ட உரைகள் இடம் பெறும் அளவிற்கு அக்கறையின்றி செயல்பட்ட இந்த மாநாட்டின் பொறுப்பாளர்கள் உரிய பதில் அளிக்க வேண்டும்" – என வலியுறுத்தியுள்ளனர்.

# ட்ரம்ப்பும் மோடியும் நேற்று தொலைபேசியில் பேச்சு!

புதுடில்லி,ஜன.09

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் – இந்தியப் பிரதமர் மோடி ஆகிய இரு தலைவர்களும் நேற்று தொலைபேசி வாயிலாக பேச்சு நடத்தினர். இந்த பேச்சின் போது, ஆப்கானிஸ்தான் பாதுகாப்பு, இந்தியாவுடனான அமெரிக்க வர்த்தகப் பற்றாக்குறையைக் களைதல், இந்தோ–பசுபிக் பிராந்தியத்தில் சுபிட்சம் மற்றும் பாதுகாப்பை பலப்படுத்துவது உட்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து இரு தலைவர்களும் ஆலோசித்தனர்.



மேலும், இரு நாட்டு தலைவர்களும் புத்தாண்டு வாழ்த்துக்களையும் பகிர்ந்து கொண்டனர். 2019– ஆம் ஆண்டிலும் இரு நாட்டு தலைவர்களும் இணைந்து பணியாற்றி இரு நாடுகளுக்கு இடையேயான உறவை மேலும் பலப்படுத்த அவர்கள் பரஸ்பரம் உறுதி பூண்டனர்.

# வாவர் மசூதிக்குள் நுழைய முயன்ற 3 பெண்கள் உட்பட 5 பேர் கைது!

பத்தனம்திட்டா,ஜன.09

சபரிமலை விவகாரத்தால் கேரளாவில் வன்முறை நீடித்து வரும் நிலையில், சபரிமலை வாவர் பள்ளிவாசலுக்கு செல்ல முயன்ற தமிழகத்தைச் சேர்ந்த பெண்கள் கேரளாவில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.

திருப்பூரில் இருந்து சபரிமலை வாவர் பள்ளிவாசலுக்கு செல்ல முயன்ற தமிழகத்தை சேர்ந்த 3 பெண்கள் உள்ளிட்ட 5 பேரையே கேரளப்பொலிஸார் கைது செய்தனர்.

இந்த வாவர் பள்ளி வாசலுக்குள் செல்லப் பெண்களுக்கு அனுமதி கிடையாது. இந்த நிலையில் வாவர் சாமி பள்ளிவாசலுக்குள் நுழைய தமிழகத்தில் இருந்து சில பெண்கள் வருகின்றனர் எனக் கேரளப் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து வாகன சோதனையில் ஈடுபட்ட பொலிஸார், 3 பெண்கள்

**சபரிமலை சர்ச்சையில் புதிய திருப்பம்**



உட்பட 5 பேரை கேரள மாநிலம் கொழிஞ்சாம்பாறையில் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட சுசீலா தேவி, ரேவதி, காந்திமதி, திருப்பதி, முருகசாமி ஆகியோர் இந்து மக்கள் கட்சி தொண்டர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சபரிமலை ஐயப்பன் கோயிலுக்குள் பெண்களை அனுப்பக் கடுமையான முயற்சிகளை மேற்கொள்ளும் கேரள அரசு, வாவர் பள்ளி வாசலுக்குள் செல்லவும் பெண்களை அனுமதிக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

இந்த விவகாரம் குறித்து விளக்கம் அளித்துள்ள இந்து மக்கள் கட்சித் தலைவர் அர்ஜுன் சம்பத் கூறியவை வருமாறு:-

சபரிமைலையின் புனிதம் காக்கப்பட வேண்டும். சபரிமலை கோவிலுக்குள் 2 பெண்கள் போலிஸ் பாதுகாப்புடன் சென்று வந்த நிலையில், மசூதிக்கு செல்ல பெண்களுக்கு ஏன் மறுப்பு தெரிவிக்கிறீர்கள். மசூதிக்குள் பெண்ணுரிமையை நிலைநாட்ட மறுப்பது ஏன்? பினராயி விஜயனின் இரட்டைவேடம் ஏன்? இந்துக்களுக்கு மிகப்பெரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது. ஒருதலைபட்சமான இந்த நடிவடிக்கையை வாபஸ் பெற வேண்டும் என்பதுதான் எங்களது கோரிக்கை. – என்றார்.

# தமிழக அமைச்சருக்கு 3 ஆண்டுகள் சிறை குற்ற தீர்ப்பால் எம்.எல்.ஏ. பதவியும் 'அவுட்'!



## 20 ஆண்டுகளுக்கு முன்னர் பஸ்ஸுக்குக் கல்லெறிந்த வழக்கில் உத்தரவு

சென்னை,ஜன.09

தமிழகத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் பாலகிருஷ்ணரெட்டிக்கு பேருந்துகளை கல்வீசித்தாக்கிய வழக்கில் மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அந்த தண்டனையை நிறுத்திவைக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இவர் அ.தி.மு.க. சார்பில் ஓசூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்.

1998ஆம் ஆண்டு கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரை அடுத்துள்ள பாகலூரில் கள்ளச்சாராயம் விற்கப்படுவதைக் கண்டித்துப் பொதுமக்கள் போராட்டம் நடத்தினர். அப்போது அந்த வழியாக வந்த அரசுப் பேருந்துகள், காவல்துறை வாகனங்கள் மீது கல்வீசித் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த விவகாரத்தில் பாலகிருஷ்ண ரெட்டி உட்பட 108 பேர் மீது வழக்குப் பதிவுசெய்யப்பட்டது. இதில் பாலகிருஷ்ண ரெட்டி 78ஆவது குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டிருந்தார். அவர் தற்போது அமைச்சராக இருக்கும் நிலையில், இந்த வழக்கு சென்னையில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது.

இந்த வழக்கில் நேற்றுத் தீர்ப்பு வழங்கப்பட்டது. அதில், பாலகிருஷ்ண ரெட்டி உள்பட 16 பேர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன என நீதிபதி கூறினார். இதில் பாலகிருஷ்ண ரெட்டிக்கு 3 ஆண்டு சிறை தண்டனையும் 10,500 ரூபா அபராதமும் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.

இதையடுத்து, தாங்கள் இந்தத்தீர்ப்பை எதிர்த்து முறையீடு செய்யப் போகிறார்கள் எனவும் அதுவரை தங்கள் மீதான தண்டனையை நிறுத்திவைக்க வேண்டும் எனவும் 16 பேரும் மனுதாக்கல் செய்தனர். இந்த மனுவை விசாரித்த நீதிபதி, ஒரு மாதத்திற்குள் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனுத்தாக்கல் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடன் தண்டனையை நிறுத்திவைப்பதாகக் கூறினார்.

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின்படி, எந்த ஒரு சட்டமன்ற உறுப்பினரும் ஒரு குற்ற வழக்கில் இரண்டாண்டுகளுக்கு மேல் சிறை தண்டனை விதிக்கப்பட்டால், அவரது உறுப்பினர் பதவி பறிபோகும். அதன்படி பாலகிருஷ்ண ரெட்டி தனது சட்டமன்ற உறுப்பினர் பதவியை இழந்திருக்கிறார்.

தண்டனை நிறுத்திவைக்கப்பட்டிருப்பதால் இது மாறுமா என உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி சந்துருவிடம் கேட்டபோது, தீர்ப்பை நிறுத்திவைப்பது வேறு. தண்டனையை நிறுத்திவைப்பது வேறு. தண்டனையை நிறுத்திவைத்திருப்பதால் அவர் குற்றவாளி அல்லர் என்று ஆகாது. ஆகவே அவரது பதவி பறிபோகும் என்று தெரிவித்தார்.

# வாயுக் கசிவால் மூச்சுத் திணறி பாகிஸ்தானில் எட்டுப் பேர் சாவு

பொவர்,ஜன.09

பாகிஸ்தானில் அடுத்தடுத்து நடந்த ஹீட்டர்(சூடேற்றி) வாயு கசிவு சம்பவங்களில் மூச்சுத் திணறி 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

பாகிஸ்தானின் வடமேற்கே அபோதாபாத் நகரில் பண்டி தொண்டியான் கிராமத்தில் வசித்து வந்த ஒரு குடும்பத்தினர் இரவில் தூங்க செல்வதற்கு முன் அதிக குளிராக இருக்கிறது என்பதற்காக ஹீட்டரை ஒன் செய்து விட்டுத் தூங்கி உள்ளனர்.

இதில், ஹீட்டர் திடீரென நின்று போயுள்ளது. அதன்பின் அதில் இருந்து கசிந்த வாயு வீடு முழுவதும் பரவியுள்ளது.

இந்த சம்பவத்தில் 3 குழந்தைகள் உள்பட ஒரே குடும்பத்தைச்சேர்ந்த 5 பேர் மூச்சுத் திணறிப் பலியாகினர்.

இந்தப் பகுதிக்கு அருகே இதேபோன்ற மற்றொரு சம்பவத்தில் ஹீட்டரை ஒன் செய்து விட்டுத் தூங்கச் சென்ற 3 பேர் வாயு கசிவால் மூச்சுத் திணறி உயிரிழந்து உள்ளனர்.

# கம்போடியாவில் தீ விபத்து !

## 10 இற்கும் மேற்பட்டோர் காயம்



கம்போடியாவிலுள்ள 18 மாடி சூதாட்ட விடுதி ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 10 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

தாய்லாந்து எல்லைக்கு அருகில் அமைந்துள்ள ஜென்ரிங் குறோன் என்ற சூதாட்ட விடுதியிலேயே இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது 10 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர் எனவும், காயமடைந்தவர்கள் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில் மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

அத்துடன், தீ விபத்தினால் ஏற்பட்ட சேத விவரங்களை கணக்கிடுவதற்குரிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (ஐ)

# தென்னாபிரிக்கா ரயில் விபத்தில் மூவர் உயிரிழப்பு; 200 பேர் காயம்



தென்னாபிரிக்காவில் இடம்பெற்ற ரயில் விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளமையுடன் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 200 ஆக அதிகரித்துள்ளது.

தென்னாபிரிக்கத்தலைநகர் பிரிட்டோரியாவில் இரண்டு ரயில்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்டதனாலேயே நேற்றுச் செவ்வாய்க்கிழமை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்தப் பகுதியில் தற்போது தொடர்ச்சியாக மீட்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. காயமடைந்தவர்களில் பலர் மிகவும் ஆபத் தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை காரணமாக உயிரிழந்தவர் களின் எண்ணிக்கை மேலும் அதிக்கும் என அஞ்சப்படுகின்றது.

ரயில் விபத்து தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுக்குமாறு அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது. (ஐ)

# சிரியாவிலிருந்து அமெரிக்கப் படைகள் வாபஸாகும் திட்டம் பிற்போடப்பட்டது

## இரு தரப்புகளும் சேர்ந்து புதிய உடன்பாடு

வொஷிங்டன்,ஜன.10

சிரியாவில் இருந்து அமெரிக்க படைகள் உடனடி வாபஸ் இல்லை எனதிபர் டிரம்பின் ஆலோசகர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளை ஒடுக்குவதற்காக 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அமெரிக்க இராணுவத்தினர் குவிக்கப்பட்டு உள்ளனர். இந்த நிலையில் கடந்த மாதம் 19 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், சிரியாவில் இருந்து தனது நாட்டு படைகள் வெளியேறும் என்று திடீரென அறிவித்தார். இது, சிரியாவின் வடகிழக்கு பகுதியில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்க படைகளுடன் இணைந்து சண்டையிட்டு வரும் குர்து போராளிகளுக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், டிரம்ப் நிர்வாகம் நேற்று முன்தினம் துருக்கி அரசுடன் ஒரு புதிய ஒப்பந்தம் செய்து கொண்டது. அதில் 'சிரியாவில் ஐ.எஸ். இயக்கத்தினரை தோற்கடிக்கும் வரை அமெரிக்க படைகள் வாபஸ் பெறப்படமாட்டாது. அதேபோல் குர்து போராளிகளின் பாதுகாப்பையும் துருக்கி அரசு உறுதி செய்யவேண்டும்' என்று கூறப்பட்டு இருந்தது.




இந்தத் தகவலை நிருபர்களிடம் தெரிவித்த அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜான் போல்டன், சிரியாவில் இருந்து அமெரிக்க படைகளை வாபஸ்பெறுவதற்கு குறிப்பிட்ட காலக்கெடு எதுவும் இல்லை.

ஐ.எஸ். பயங்கர வாதிகள் தோற்கடிக்கப்படும் வரை சிரியாவில் இருந்து அமெரிக்க படைகள் வெளியேறாது என்று டிரம்ப் திட்டவட்டமாக தெரிவித்து இருக்கி றார் என்று குறிப்பிட்டார்.

துருக்கி அரசு குர்து போராளிகளை தனது நாட்டில் பயங்கரவாத இயக்கமாக அறிவித்து இருப்பது குறிப்பிடத்தக்கது.

# உலக வங்கியின் தலைவர் திடீரெனப் பதவி விலகல்!



வொஷிங்டன்,ஜன.09

உலக வங்கியின் தலைவராக இருக்கும் ஜிம் யாங் கிம் பதவி விலகுகிறார் என அறிவித்துள்ளார்.

கடந்த 2011 அசம் ஆண்டு இந்தப் பொறுப்புக்கு வந்த ஜிம்மின் பதவிக் காலம் 2016 ஆம் ஆண்டு முடிவடைந்தது. இதையடுத்து, 2 ஆவது முறையாக அப்போதைய அமெரிக்க அதிபர் ஒபாமாவால் ஜிம் யாங் கிம் முன்னிறுத்தப்பட்டார். அப்பதவிக்கு வேறுயாரும் போட்டியிடாததால், இரண்டாவது முறையாக அவரே தேர்வு செய்யப்பட்டார்.

2022 ஆம் ஆண்டு அவரின்பதவிக்காலம் முடிவடைய உள்ள நிலையில், இந்த மாத இறுதியுடன் பொறுப்பில் இருந்து விலகுகிறார் என ஜிம் யாங் கிம் அறிவித்துள்ளார். தனது பதவி விலகல் குறித்து, உலக வங்கி ஊழியர்களுக்கு ஜிம் கடிதம் அனுப்பியுள்ளார். ஜிம் பதவி விலகுவதன் மூலம், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்புக்குத் தனக்கு விருப்பப்பட்ட நபரை உலக வங்கித் தலைவர் பொறுப்புக்கு முன்னிறுத்தும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. ஜிம் பதவி விலகுகின்றமையை அடுத்து, உலக வங்கியின் தலைமைச் செயல் அதிகாரியான கிறிஸ்டலினா ஜார்ஜிவியா பெப்ரவரி முதலாம் திகதி முதல் கூடுதல் பொறுப்பை கவனிப்பார் என உலக வங்கி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

உலக வங்கியின் அடுத்த தலைவரை அவ்வங்கியின் இயக்குநர்கள் சபை தேர்வு செய்யும். உலகவங்கியின் மிகப்பெரிய பங்குதாரராக அமெரிக்காவே உள்ளது. 189 நாடுகளை உறுப்பினராக கொண்ட உலக வங்கி, அரசுகளுக்கான நிதி உதவி அளிக்கும் மிகப்பெரும் அமைப்பாக உள்ளது. வளர்ச்சி திட்டங்கள், திட்டங்களுக்காக குறைந்த விலையில் கடன் அளித்தல் ஆகிய பணிகளை உலக வங்கி செய்துவருகிறது. இரண்டாம் உலகப்போரின் இறுதியில் தொடங்கப்பட்ட உலக வங்கியின் தலைவர்கள் அனைவருமே அமெரிக்கர்களாகவே இருந்துள்ளனர்.

இதன் சகோதர அமைப்பான சர்வதேச நிதி கண்காணிப்பகத்தின் (IMF) தலைவராக ஐரோப்பிய நாட்டவர்களே இடம் பெற்று வருகின்றனர். சீனா உட்பட பிற ஆசிய நாடுகள் இந்த முறைக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. பொருளாதார நெருக்கடியில் சிக்கும் நாடுகளுக்கு அவசர கடன்கள் வழங்கும் அமைப்பான ஐ.எம்.எவ். அமைப்பின் தலைவராக தற்போது பிரான்ஸ் முன்னாள் நிதி அமைச்சர் கிரிஸ்டியன் லாகார்டே உள்ளார்.

# வட கொரிய அதிபர் சீனாவுக்கு பயணம்



பெய்ஜிங்,ஜன.09

சீனத் தலைவர் ஜி ஜிங்பிங் அழைப்பை ஏற்று வடகொரிய அதிபர் கிம் ஜாங் அன், சீனாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வடகொரியாவின் நெருங்கிய நட்பு நாடாகவும் முக்கிய வர்த்தக கூட்டாளியாகவும் சீனா திகழ்கிறது. இதனால், இரு நாட்டு தலைவர்களும் அடிக்கடி சந்தித்துக் கொள்கின்றனர். கடந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் முறையாக சீனா சென்ற கிம் ஜாங் அன், பிறகு இரண்டு முறை அங்கு சென்று சீன அதிபர் ஜி ஜிங்பிங்கை சந்தித்து பேசினார்.

இந்த நிலையில், 4 ஆவது முறையாக கிம் ஜாங் அன் சீனா பயணம் மேற்கொண்டுள்ளார். சீன அதிபர் ஜி ஜிங்பிங் விடுத்த அழைப்பின் பேரில் கிம் ஜாங் அன் தனது மனைவியுடன் சீனாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார் எனக் கொரிய செய்தி நிறுவனங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ரயில் மூலமாக சீனாவுக்கு கிம் ஜாங் அன் சென்றுள்ளார்.

அமெரிக்கா பொருளாதார தடையை நீக்காவிட்டால் மீண்டும் அணு ஆயுதச் சோதனையை நடத்துவோம் என்று கிம் ஜாங் அன் சமீபத்தில் மிரட்டல் விடுத்து இருந்த நிலையில், சீன அதிபருடனான கிம் ஜாங் அன்னின் சந்திப்பு சர்வதேச அளவில் உற்று நோக்கப்படுகிறது.

நேற்று கிம்ஜோங் உன்னின் 35ஆவது பிறந்தநாள் என்பதால் அங்கு தனது பிறந்த நாளை கொண்டாடவும் அவர் திட்டமிட்டிருந்தார் என ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir



# எதிர்வரும் பட்ஜெட்டில் தமிழ்ப் பிரதிநிதிகள் தமிழர் நலன் சார்ந்து முடிவெடுக்கவேண்டும்

## ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வேண்டுகோள்



எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் தமிழ்ப் பிரதிநிதிகள் தமிழ் மக்கள் நலன்சார்ந்து முடிவெடுக்கவேண்டும் என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அரசியல் பீட கூட்டம் கடந்த திங்கட்கிழமையன்று கட்சியின் தலைவர் சுரேஷ். பிரேமச்சந்திரன் தலைமையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இதன்போது நாட்டின் சமகால அரசியல் சூழல் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து ஈ.பி.ஆர்.எல்.எவ்.வின் தலைவர் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதன் முழு விவரம் வருமாறு:

யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் மூன்றாம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ள ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடிப்பது தொடர்பாகவும், அதனைத் தொடர்ந்து வன்னி மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் மாவட்ட மாநாடுகளை நடத்துவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

ஆளுநர்கள் நியமனம், அதனைத் தொடர்ந்து வடக்கு - கிழக்கில் ஏற்படக் கூடிய அரசியல் சூழல்கள், மார்ச் மாதம் வரவுள்ள வரவு - செலவுத் திட்டம் இவை தொடர்பில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை எடுக்க வேண்டிய நிலைப்பாடு, ஆகியவற்றுடன் வரவிருக்கும் வரவு - செலவுத் திட்டத்தில் தமிழ் மக்கள் பிரதிநிதிகள் எத்தகைய முடிவுகளை மேற்கொள்வது மக்களுக்கு நலன்பயக்கும் என்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இதுவரை காலமும் புதியதொரு அரசமைப்பு கொண்டுவரப்படும் என்றும் அது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் என்றும் அதனூடாக தமிழ் மக்களின் பல பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவம் தமிழ் மக்களுக்குச் சொல்லிவந்தது.

ஆனால் இன்றிருக்கக்கூடிய சூழ்நிலையில், தேசிய அரசு சிதைவடைந்து தனித்தனி வழியே செல்லும்போது, பாராளுமன்றத்தில் புதியதொரு அரசமைப்புக்கான வரைவு சமர்ப்பிக்கப்பட்டாலும், அதில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ள மாட்டாது என்பதும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படமாட்டாது என்பதும் நிதர்சனமான உண்மையாக இருக்கின்றது. இந்நிலையில், தொடர்ச்சியாக அரசியல் சாசனத்தைக் கொண்டுவருகிறோம் என்ற வாதத்தை நிறுத்தி, தமிழ் மக்களுக்கான ஏனைய பிரச்சினைகளுக்கான தீர்வைக் காண்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனவும், அதற்கு வரவுள்ள வரவு - செலவுத் திட்ட நிகழ்வை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கையாளவேண்டும் என்று கோரிக்கை விடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இதுவரை காலமும் இந்த அரசுக்கு எந்தவித முன்நிபந்தனைகளும் இல்லாமல், சகல வரவு - செலவுத் திட்டங்களுக்கும் அரசின் ஏனைய அனைத்துச் செயற்பாடுகளுக்கும் எமது கட்சியைத் தவிர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளித்து வந்துள்ளது. ஆனால் தமிழ் மக்களின் எந்தப் பிரச்சினைக்கும் காத்திரமான தீர்வைக் காணமுடியவில்லை. வடக்கு மாகாணத்தில் மின்சார சபை, பிரதேச சபைகள், யாழ். பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாகம் ஆகியவற்றின் சிற்றூழியர் பணிகளுக்குக்கூட தென்பகுதிச் சிங்கள இளைஞர்கள் நியமிக்கப்படுகின்றார்கள்.

ஆனால், அதே தகுதிகளுடன் ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் வேலையின்றிருக்க, இத்தகைய நியமனங்களை அங்கீகரிக்க முடியாதென்றும், அவை உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்ப் பிரதிநிதிகள் குறைந்த பட்சம் பின்வரும் விடயங்கள் தொடர்பில் காத்திரமான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும் என்று கோருவதாகவும் தீர்மானிக்கப்பட்டது. இதனடிப்படையில், வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவளிக்க வேண்டுமாக இருந்தால்,

1 தமிழ் மக்களின் காணிகளை முழுமையாக விடுவிப்பது.

2 வனவளப் பாதுகாப்பு, மகாவலி அபிவிருத்தி, தொல்பொருள் மற்றும் அகழ்வாராய்ச்சி திணைக்களம், வன ஜீவராசிகள் பாதுகாப்பு போன்ற திணைக்களங்கள் இவற்றுடன் முப்படைகளின் அடாத்தான காணி அபகரிப்பு என்பவை உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

3 அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும்.

4 காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் தாமதமின்றி நீதி வழங்குதல்

போன்ற கோரிக்கைகளை முன்வைத்து அதற்கு அரசாங்கம் ஆக்கபூர்வமான தீர்வைக் காண்பதற்கு முன்வரும் பட்சத்தில் அதற்கு ஆதரவளிப்பது குறித்து பரிசீலிக்கவேண்டும் என்று கோருவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

விரைவில் மத்தியகுழுவைக் கூட்டி தற்போதைய அரசியல் சூழலில் நாம் மேற்கொள்ள வேண்டிய அடுத்த நகர்வுகள் குறித்து ஆராய்வதாகவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையகத்தின் கூட்டத் தொடரைச் சமாளிப்பதற்கு இலங்கை அரசு பல்வேறுபட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அந்தவகையில்தான் நிறைவேற்றப்படாவிட்டாலும் நாடாளுமன்றத்தில் புதிய அரசியல் யாப்பிற்கான வரைவைச் சமர்ப்பிப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த நிகழ்வுகளின் ஊடாக இலங்கை அரசாங்கம் ஒரு முன்னேற்றகரமான நடவடிக்கையை எடுப்பது போன்றும் 30/1, 34/1 தீர்மானங்களை நிறைவேற்றுவது போன்ற தோற்றப்பாட்டைக் காணப்பிப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஆதரவாகச் செயற்படுகின்றது. இத்தகைய தமிழ் மக்களுக்கு விரோதமான செயற்பாடுகளை எமது கட்சி மக்களுக்குத் தெளிவுபடுத்துவது என்று முடிவெடுக்கப்பட்டது.

இதே நேரத்தில் அரசியல் பீட உறுப்பினர்கள் மரியாதை நிமித்தமாக முன்னாள் நீதியரசரும், வடக்கு மாகாணசபையின் முன்னாள் முதல்வரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான கௌரவ விக்னேஸ்வரன் அவர்களை சந்தித்து இன்றைய அரசியல் சூழல் தொடர்பாகவும், நாங்கள் இணைந்து பணியாற்ற வேண்டிய பணிகள் தொடர்பாகவும் கலந்துரையாடினோம் - என்றுள்ளது. (ஐ)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 50 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதி







கிளிநொச்சி, ஜன. 09

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வாழ்விடங்களை விட்டு இடம்பெயர்ந்து தற்காலிகமாக ஜெயபுரம் மகா வித்தியாலயத்தில் தங்கியிருந்த 39 குடும்பங்கள் உள்ளிட்ட 50 குடும்பங்களுக்கு மயிலிட்டி திருப்பூர் இளைஞர் நற்பணி ஒன்றியத்தின் சார்பில் உலருணவு பொதிகள், கற்றல் உபகரணங்கள் மற்றும் சிறுவர்களுக்கான பால்மா என்பன நேற்று வழங்கப்பட்டன.

மயிலிட்டி திருப்பூர் இளைஞர் நற்பணி ஒன்றியத்தின் மனிதாபிமான முன்னெடுப்பாக மேற்கொள்ளப்பட்டுவரும் வெள்ள நிவாரணப் பணியின் மூலம் ஜெயபுரம் வடக்கு, தெற்கு கிளி/69, கிளி/70 கிராம சேவகர் பிரிவுகளுக்குட்பட்ட 50 குடும்பங்களுக்கே உலருணவு பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி 50 குடும்பங்களைச் சேர்ந்த 1 - 5 வரை கல்வி கற்கும் 11 மாணவர்கள், 6 - 11 வரை கல்வி கற்கும் 17 மாணவர்களென 28 மாணவர்களுக்குத் தேவையான கற்றல் உபகரணங்களும், 5 வயதிற்குட்பட்ட 16 சிறுவர்கள் மற்றும் குழந்தைகளுக்கான பால்மா பெட்டிகள், திரிபோசா சத்துமா பைக்கற் (750கிராம்) என்பனவும் இதன்போது வழங்கப்பட்டன.

பூநகரி பிரதேச செயலரின் அனுமதியுடன் இந்தப் பகுதி கிராம உத்தியோகத்தர்களின் பிரசன்னத்தில் ஒரு இலட்சத்து முப்பதாயிரம் ரூபா பெறுமதியில், 50 குடும்பங்களுக்குமான உலருணவுப் பொதிகள், கற்றல் உபகரணங்கள் மற்றும் சிறுவர்களுக்கான பால்மா, சத்துமா என்பன வழங்கி வைக்கப்பட்டிருந்தது.

5 கிலோ அரிசி, 2 கிலோ சீனி, 1 கிலோ பருப்பு, 1 அங்கர்(400கிராம்), 1 நூடில்ஸ் பைக்கற், 5 பிஸ்கற், 1 ரின் மீன், 2 சவர்க்காரம், 5 அட்டை பனடோல்.

இவை அடங்கிய இரண்டாயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகள் இதன்போது வழங்கப்பட்டிருந்தன.

ஏற்கனவே கடந்த 27ஆம் திகதி அன்று மயிலிட்டி திருப்பூர் இளைஞர் நற்பணி ஒன்றியத்தின் சார்பில், பிரமந்தனாறு கிளி/58 கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட 539 குடும்பங்களுக்குச் சுமார் எட்டு இலட்சம் ரூபாவுக்குமேற்பட்ட பெறுமதியில் உலரு ணவுப் பொருள்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பழைய முறைமையில் மாகாண சபைத் தேர்தல்: கட்சித் தலைமைகளின் முடிவு வரவேற்கத்தக்கது

## சபாநாயகரைப் பாராட்டுகின்றார் கிழக்கு முன்னாள் முதல்வர்

கொழும்பு, ஜன. 09

மாகாண சபைத் தேர்தலைகளை பழைய முறைமையிலேயே நடத்துவதற்கு கட்சி தலைவர்கள் கூட்டத்தில் இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. கடந்த வெள்ளியன்று சபாநாயகர் தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இது தொடர்பாக ஆராயப்பட்டு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்க அம்சமாகும். ஜனநாயகத்தின் காவலர் என்பதை சபாநாயகர் நிரூபித்துள்ளார்.

- இப்படித் தெரிவித்துள்ளார் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட்.

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-



மாகாண சபைத் தேர்தல் குறித்து கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் சில முடிவுகளை எடுக்க சபாநாயகர் முன்வந்துள்ளமை பாராட்டுக்குரியது. அவரது இந்த அணுகுமுறை குறித்து அவருக்கு எனது பாராட்டுகளை கடிதம் மூலம் தெரிவித்துள்ளேன்.

பழைய முறைமையில் மாகாண சபைகள் தேர்தல்களை நடத்த வேண்டுமெனில் இது தொடர்பான அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட கட்டளைகள் சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கையெடுக்க வேண்டும்.

எனவே, துரிதகதியில் இதற்கான நடவடிக்கைகளை எடுக்க கட்சித் தலைமைகள் திடன் கொண்டு செயற்படவேண்டும். இது குறித்து அமைச்சர் மனோ கணேசன் விரைவில் பிரேரணை ஒன்று கொண்டு வரப்படும் எனத் தெரிவித்துள்ளமை பாராட்டுக்குரியது.

தற்போது திடீரென ஆளுநர்கள் நியமனங்கள் நடைபெற்றுள்ளன. இனியும் காலதாமதமின்றி மாகாண சபைகளின் தேர்தல்களை நடத்தி ஆளுநர்கள் அதிகாரங்கள் அரசாட்சி செய்யாமல் மக்கள் ஜனநாயகம் ஆட்சி செய்யும் நிலைமைகளை ஏற்படுத்த வேண்டும்.

கலைக்கப்பட்டுள்ள ஆறு மாகாண சபைகளும் ஜனநாயக ரீதியில் இயங்குவதற்கான நிலைகளின்றி ஸ்தம்பிதம் அடைந்து காணப்படுகின்றன. பொது மக்கள் தமது தேவைகளை நிறைவு செய்ய முடியாது பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர். மாகாண மட்டத்திலுள்ள நிர்வாகங்கள் முறையான நடைமுறைகளின்றி தேக்கமுற்றுள்ளன.

எனவே, துரிதகதியில் மாகாண சபைத் தேர்தலை நடத்தி மக்களின் ஜனநாயகம் நிலைநிறுத்தப்பட ஆவன செய்ய அனைத்துக் கட்சிகளினதும் தலைமைகளும் முன்வரவேண்டும் - என்றுள்ளது. (ஐ)

## வவுனியா புதிய மதுபானச்சாலையை உடனே மூட ஆவன செய்ய வேண்டும்

### புதிய ஆளுனருக்குப் பொதுமக்கள் கடிதம்

வவுனியா, ஜன. 09

வவுனியா புதிய பஸ் நிலையத்துக்கு முன்பாகத் திறக்கப்பட்டுள்ள மதுபானச்சாலையை மூடுவதற்கு ஆவன செய்து தரவேண்டும் எனக் கோரி வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநருக்கு வவுனியா குடியிருப்பு கிராம அபிவிருத்திச் சங்கம் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

புதிய பஸ் நிலையத்துக்கு முன்பாகப் புதிதாக மதுபானச்சாலையொன்று திறக்கப்பட்டுள்ளது. மக்கள் குடிமனைகள், ஆலயம், வவுனியா பொது வைத்தியசாலைகளுக்கு அண்மையாகவும் அரசின் எண்ணக் கருவில் உருவாகிய பாரம்பரிய உணவகம் அமைந்துள்ள பகுதிக்கு முன்பாகவும் இந்த மதுபானச்சாலை திறக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாடானது மக்களின் இயல்பு வாழ்வியலைப் பாதிக்கும் என்பதுடன் சமூக கட்டமைப்பைச் சிதைக்கும் செயற்பாடு என்பதனாலும் அந்த மதுபானச்சாலையை மூட ஆவன செய்து தருமாறு தாழ்மையுடன் கோருகின்றோம்.

அத்துடன் அந்த மதுபானச்சாலையை மக்கள் குடிமனை உள்ள பகுதியில் திறப்பதற்கு அனுமதி வழங்கிய கிராம சேவகர், பிரதேச செயலாளர், மதுவரித் திணைக்கள அதிகாரிகளுக்கும் இது தொடர்பான தெளிவூட்டல்களைத் தாங்கள் வழங்கி உதவிபுரிய வேண்டும் - என்றுள்ளது.

(ஐ-100)

## வன்னி மாணவர்களுக்கு கற்றல் உபகரண உதவி



யாழ்ப்பாணம், ஜன. 09

யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீட 32ஆம் அணியினரின் நிதி அனுசரணையின் மூலம் முல்லைத்தீவு பேராறு வித்தியாலய மாணவர்கள் 40 பேருக்கும், கிளிநொச்சி பொன்னகர் பிரதேச மாணவர்கள் 40 பேருக்கும் கடந்த 05ஆம் திகதி கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

2019ஆம் கல்வியாண்டை முன்னிட்டு வெள்ள அனர்த்தத்தால் பாதிப்புக்குள்ளான மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களைத் தந்துதவுமாறு வேருன்றி நிதியத்திடம் கோரிக்கைக் கடிதம் சமர்ப்பித்தமைக்கு அமைவாகக் கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. (ஐ)

## மொட்டுக் கட்சியின் உறுப்பினர் கைது!

கொழும்பு, ஜன. 09

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைப் பிரதிநிதித்துவப்படுத்தும், கொழும்பு மாநகர சபை உறுப்பினர் கே.ஜி.குலதிஸ்ஸ கைது செய்யப்பட்டுள்ளார்.

தெமட்டகொடைப் பகுதியில் உள்ள பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவித்தமை தொடர்பில் அவர் கைதானார்.

கொழும்பு குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்ட மாநகர சபை உறுப்பினரைப் புறக்கோட்டை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தெமட்டகொடைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 34 வயதுடைய நபர் உயிரிழந்ததுடன் மேலும் இருவர் காயமடைந்திருந்தனர். இதன் பின்னர் அமைச்சரின் பாதுகாப்புப் பிரிவு அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## போதைப்பொருளுக்கு அடிமையாகிய மாணவனுக்கு ஒரு ஆண்டு மறுவாழ்வு

### யாழ். நீதிமன்ற நீதிவான் உத்தரவு

யாழ்ப்பாணம், ஜன. 09

கஞ்சா மற்றும் ஹெரோயின் போதைப்பொருளுக்கு அடிமையாகிய 17 வயது மாணவனைப்பலனறுவை கந்தகாடு மறுவாழ்வு நிலையத்தில் அனுமதித்து ஒரு ஆண்டு மறுவாழ்வு வழங்குமாறு யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.எஸ்.பி.போல் உத்தரவிட்டார்.

மகன் எமது சொல்லைக் கேட்பதில்லை. போதைப்பொருளுக்கு அடிமையாகிவிட்டார். வீட்டில் இருந்து பொருள்களைத் திருடிச்சென்று விற்றுவிட்டு நண்பர்களுடன் சேர்ந்து போதைப்பொருள்களைப் பயன்படுத்துகிறார்.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையிலும் சித்தியடையவில்லை. பாடசாலைக்கும் ஒழுங்காகச் செல்வதில்லை. அவரைச் சீர்திருத்தப் பாடசாலைக்கு அனுப்பி நல்வழிப்படுத்தவேண்டும் என்று மாணவனின் தந்தை மன்றிடம் கேட்டுக்கொண்டார்.

தந்தையாரின் விண்ணப்பத்தை ஆராய்ந்த யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் அந்தோனி சாமி பீற்றர் போல், மாணவனை எதிர்வரும் ஒரு ஆண்டுக்கு பொலனறுவை கந்தகாடு மறுவாழ்வு நிலையத்தில் தடுத்து வைத்து மறுவாழ்வு வழங்குமாறு உத்தரவிட்டார்.

மாணவனின் மறுவாழ்வு நிறைவடையும்வரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

ஹெரோயின் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் 17 வயது மாணவன் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவர் கடந்த டிசெம்பர் இறுதியில் யாழ்ப்பாணம் நீதிமன்ற அப்போதைய நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் முன்னிலையில் பொலிஸாரால் முற்படுத்தப்பட்டார்.

மாணவனை ஒரு வார காலத்துக்குச் சான்று பெற்ற சீர்திருத்தப் பாடசாலையில் அனுமதிக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. வழக்கு கடந்த 4ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.எஸ்.பி. போல் முன்னிலையில் வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது. சந்தேகநபர் மன்றில் முற்படுத்தப்பட்டார். அவரது தந்தையும் மன்றில் முன்னிலையானார்.

பொலனறுவை வெலிகந்தை - கந்தகாடு மறுவாழ்வு முகாமில் போதைப்பொருளுக்கு அடிமையாகிவர்களுக்கு மறுவாழ்வு வழங்கப்படுகிறது.

நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் வரும் இந்த மறுவாழ்வு முகாமில் முன்னாள் போராளிகளுக்கும் மறுவாழ்வு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்டார்க் மௌனமாக நின்றது ஏன்?

## ரிக்கி பொண்டிங் வேதனை

சிட்னி டெஸ்டில் நாதன் லயன் 'ரிவ்யூ' செய்யாததும், ஸ்டார்க் பேசாமல் இருந்ததும் ஆஸ்திரேலிய அணியின் மனநிலையை பிரதிபலிப்பதாக முன்னாள் வீரர் ரிக்கி பொண்டிங் வேதனை தெரிவித்துள்ளார்.

சிட்னி டெஸ்டில் 4ஆம் நாளான நேற்று முன் தினம் ஆஸ்திரேலிய அணி முதல் இன்னிங்சில் 300 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தது. ஆஸ்திரேலிய வீரர் நாதன் லயன் எல்.பி.டபுள்யூ முறையில் குல்தீப் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

ஆனால், லயன் அப்போது 'ரிவ்யூ' கேட்காமல் நடுவர் ஆட்டமிழப்பு என்று கூறியதும் பவிலியன் நோக்கி




நடையைக் கட்டினார். எதிர்முனையில் இருந்த மிட்செல் ஸ்டார்க்கும் 'ரிவ்யூ' செய்யுமாறு லயனுக்கு அறிவுறுத்தவில்லை.

இதனை கவனித்த வர்ணனையாளராக இருந்த முன்னாள் வீரர் ரிக்கி பொண்டிங், இதுதான் ஆஸ்திரேலிய வீரர்களின் தற்போதைய மனநிலை என்று கருத்து தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

'லயன் ஆட்டமிழப்பு தற்போதைய ஆஸ்திரேலிய வீரர்களின் மனநிலை பற்றி நிறைய செய்திகளை எனக்கு அறிவிக்கிறது. அவர்களுக்கு ஏன் விரக்தி ஏற்பட்டுள்ளது? ஏதாவது செய்து களத்தில் நிற்கும் எண்ணம் என்பது போய்விட்டது.

ஏன் அந்த ஆட்டமிழப்பை ரிவ்யூ செய்யவில்லை. 2 'ரிவ்யூ'வும் கைவசம் உள்ளன. நேரடியாக ஆட்டமிழப்பு கொடுக்கிறார். மிட்செல் ஸ்டார்க்கும் எனக்கு வந்தது உனக்கு வேண்டுமானால் நீ 'ரிவ்யூ' கேட்டுக்கொள் என்பது போல் கைகழுவினார்.

ஆனால், இருவர் சேர்ந்து ஆடும்போது அது ஒரு கூட்டணி என்ற மனநிலை எங்கே போனது? சகவீரரைக் காப்பாற்றுவதற்கு எதிர்முனையில் நம்மால் முடிந்ததைச் செய்ய வேண்டும். ஆனால், அங்கு ஆஸ்திரேலிய வீரர்களிடம் எந்த ஒரு அவசரமும் இல்லை.

மிட்செல் ஸ்டார்க் ரன்னர் முனையில் நிற்பதைப் பாருங்கள். அவ்வளவு தள்ளி அவர் நிற்க வேண்டிய அவசியமே இல்லை. நாதன் லயன் பார்க்கிறார், அவரோ எனக்கு தெரியாது என்று நிற்கிறார். நாம் ஏன் 'ரிவ்யூ' செய்ய வேண்டும் என்று ஸ்டார்க் இருந்தார்' எனத் தெரிவித்துள்ளார்.





# பிரித்தி ஷா – மயங்க் பல ஆண்டுகள் ஆரம்ப வீரர்களாக விளையாடலாம்

இந்திய டெஸ்ட் அணிக்கு பிர்த்திவ் ஷா மற்றும் மயங்க் அகர்வால் ஆகிய இருவரும் இன்னும் பல ஆண்டுகளுக்கு ஆரம்ப வீரர்களாக விளையாடலாம் எனச் சமீபத்தில் ஓய்வுபெற்ற முன்னாள் இந்திய வீரர் கௌதம் காம்பீர் ஆலோசனை கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது–

இந்தியாவின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் சற்றுத் தற்போது தடுமாறுகின்றனர். முரளி விஜய் தற்போது அவரது கிரிக்கெட் இறுதிக் கட்டத்தை எட்டி விட்டார்.

மற்றொரு பக்கம் கே.எல். ராகுல் தடுமாறுகிறார். அவருக்கு நாம் இன்னும் நேரம் கொடுக்க வேண்டும். சற்றுப் பொறுத்திருந்து பார்த்தால் அவரும் நன்றாக ஆடுவார்.

மேலும் மற்றொரு பக்கம் பார்த்தால் 18 வயதான இளம் வீரர் பிரித்தி ஷா அற்புதமாக ஆடியுள்ளார். மேலும் மயங்க் அகர்வால் ஆஸ்திரேலியாவில் ஆரம்ப வீரராக அற்புதமாகச் செயற்பட்டுள்ளார்.

இந்த இருவரும் சேர்ந்தால் இந்திய அணிக்காக இன்னும் பல ஆண்டுகள் விளையாடலாம் என கௌதம் கம்பீர் கூறினார்.

# உலகின் பெரும் கிரிக்கெட் மைதானம் இந்தியாவில்



உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் மைதானத்தின் கட்டுமானப் பணிகள் குஜராத்தில் நடைபெற்று வருகிறது.

இந்த மைதானத்தில் ஒரு லட்சம் பேர் அமர்ந்து போட்டியைக் காண முடியும்.

63 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டு வரும் இந்த மைதானத்தின் கட்டுமானப் பணி மதிப்பீடாக ரூ.700 கோடி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

உலகின் மிகப்பெரிய மைதானமான மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தை விடப் பெரியதாக அமையும்.

இந்த மைதானத்தில் ஒரே நேரத்தில் 3 ஆயிரம் கார்களும் ,10 ஆயிரம் இருசக்கர வாகனங்களும் நிறுத்த முடியும்.மேலும் ஒலிம்பிக் தரத்திலான நீச்சல் குளமும் அமைக்கப்பட உள்ளது.

இந்த மைதானம் பயன்பாட்டிற்கு வரும் போது இந்தியாவை பெருமைப்படுத்தும் வகையிலும், நாட்டின் பெருமைக்குரிய சின்னமாகவும் மாறும் என குஜராத் மாநில கிரிக்கெட் சங்கத்தின் துணை தலைவர் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார். (ஐ)

# எங்கள் கணிப்பை இந்திய அணி பொய்யாக்கியது

டெஸ்ட் தொடரில் இந்தியாவை வீழ்த்தி விடுவோம் என்று கணித்தோம், ஆனால் நேர்மையாகவே எங்கள் கணிப்பை இந்திய அணியினர் பொய்யாக்கி விட்டனர் என ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணித்தலைவர் டிம் பெய்ன் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியிடம் டெஸ்ட் தொடரை இழந்த நிலையில், ஆஸ்திரேலிய அணித்தலைவர் டிம் பெய்ன் ஊடகங்களுக்குப் பேட்டியளித்துள்ளார்.



அப்போது தங்களது கணிப்பை இந்திய அணியினர் பொய்யாக்கிவிட்டதாக அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

இந்திய வீரர்கள் துடுப்பாட்டம், பந்து வீச்சு, களத்தடுப்பு என மூன்றிலும் சிறப்பாகச் செயல்பட்டார்கள். அதிலும் குறிப்பாக இந்தியாவின் 3 வேகப்பந்து வீச்சாளர்கள் எங்கள் துடுப்பாட்ட வீரர்களுக்கு கடும் நெருக்கடி கொடுத்தனர்.

இந்த 3 வேகப்பந்து வீச்சாளர்களுக்கு எதிராக எங்கள் துடுப்பாட்ட வீரர்கள் தயாராக கடினமாக உழைக்க வேண்டி இருந்தது. குறிப்பாக ஹரிஸ், ஹெட் ஆகியோர் இந்தியாவின் வேகப்பந்துவீச்சைச் சமாளித்து ஓட்டங்கள் சேர்க்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இந்த டெஸ்ட் தொடரை நாங்கள் இழந்தது மிகுந்த வேதனையளிக்கிறது. அதே நேரத்தில் அணியில் அனுபவம் வாய்ந்த ஸ்மித், வோர்னர் இல்லாத நிலையை நாங்கள் உணர்கிறோம். இந்தத் தொடர் தொடங்கும் முன் இந்திய அணியைத் தோற்கடித்து விடுவோம் என்று கணித்தோம்.

ஆனால், இந்தத் தொடரில் விராட் கோஹ்லி அடித்த ஓட்டங்கள், புஜாராவின் சதம், பும்ராவின் வேகப்பந்து வீச்சு அனைத்தும் கணிப்பை பொய்யாக்கியது. அதனால் தான் இந்திய அணி வெற்றி பெற்றது. எங்கள் அணியில் ஒரு வீரர் கூடச் சதம் அடிக்கவில்லை என்பது வருத்தம்தான்.

ஒரு சில வீரர்களைக் குறைசொல்வதைக் காட்டிலும், முதல் 7 துடுப்பாட்ட வீரர்களும் சரியாக விளையாடவில்லை என்றே கூற முடியும். அதே நேரத்தில் பந்துவீச்சில் நாங்கள் சிறப்பாக செயல்பட்டது ஆறுதல் அளிக்கிறது. அடுத்துவரும் இலங்கை தொடருக்கு ஊக்கமாக அமையும்' என தெரிவித்துள்ளார்.

# மலிங்க - திசார மோதல் தொடர்பில் விசாரணை




லசித் மலிங்கவுக்கும் திசார பெரேராவுக்கும் இடையிலான சமூக ஊடக மோதல் குறித்து உள்ளக விசாரணைகள் இடம்பெறும் என ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆஸ்லி டி சில்வா தெரிவித்துள்ளார்.

திசார பெரேராவும் அவரது மனைவியும் புதிய விளையாட்டுத்துறை அமைச்சரைச் சந்தித்துள்ளனர் என லசித் மலிங்கவின் மனைவி சமூக ஊடகத்தில் பதிவு செய்த பின்னர் உருவாகியுள்ள சமூக ஊடக மோதல் குறித்தே விசாரணைகள் இடம் பெறவுள்ளன.

பன்டாக்கள் ஹரீன் பெர்ணான்டோவைச் சந்தித்துள்ளன என லசித் மலிங்கவின் மனைவி குறிப்பிட்டுள்ளார்.

திசாரா பெரேராவை அணி வீரர்கள் 'பன்டா' என அழைப்பது வழமை.

இதேவேளை, சமூக ஊடகங்களில் ஒரே அணியைச் சேர்ந்த இரு வீரர்கள் மோதிக்கொள்வதை நிறுத்த முடியாத நிலையில் அணியின் முகாமையாளர்கள் காணப்படுகின்றமை இரசிகர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளதைத் தொடர்ந்து அணியின் முகாமைத்துவத்திற்கு எதிராகச் சமூக ஊடகங்களில் கடும் அதிருப்தி வெளியாகியிருந்த நிலையிலேயே ஆஸ்லி டி சில்வாவின் கருத்து வெளியாகியுள்ளது

இரு வீரர்களும் ஒழுக்காற்று விதிமுறைகளை மீறியமை கண்டுபிடிக்கப்பட்டால் கடுமையான தண்டனைகள் விதிக்கப்படலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)

காலைக்கதிர் Kalaikkathir



## போர்க்குற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றம் நேற்றுப் பிரதிச் சபாநாயகர் தலைமையில் கூடியது. இதன்போது ஆரம்ப நிகழ்வுகள் நிறைவடைந்த பின்னர் வெளிவிவகார அமைச்சரால் முன்வைக்கப்பட்ட இராஜாந்திரச் சிறப்புரிமைகள் சட்டத்தின் கீழ் வரும் கட்டளைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இராஜதந்திரப் பதவிகளுக்குத் தகுதியற்றவர்கள் நியமிக்கப்பட்டிருப்பது தொடர்பில் எங்களுக்குப் பிரச்சினை இருக்கின்றது. இதனால் நாட்டின் நற்பெயருக்கும் களங்கம் ஏற்பட வாய்ப்பு இருக்கின்றது.

அதனால் நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட, அரச சேவையில் அனுபவம் வாய்ந்த தகுதியானவர்கள் எதிர்காலத்தில் இராஜதந்திரத் தூதுவர்களாக நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்றார். (ஐ)

## ஜனாதிபதித் தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவர் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கட்சி உறுப்பினர்கள் கூட்டத்தைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தேர்தலொன்றின் மூலம் அரசின் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தயாராகவிருப்பதாக வும், முதல் வாய்ப்பிலேயே அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ளவுள்ளதாகவும் அவர் கூறினார். (ஐ)

## திருகோணமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீரவன்ஸ எம்.பி. சபையில் நேற்றுக் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பிரதிச் சபாநாயகர் ஆனந்தகுமாரசிறி தலைமையில் கூடியது.

சபாநாயகர் அறிவிப்பு, பொது மனுத்தாக்கல் உட்பட தினப்பணிகள் முடிவடைந்த பின்னர், இராஜதந்திரச் சிறப்புரிமைகள் சட்டத்தின்கீழ் கட்டளைகள்மீதான விவாதத்தை வெளிவிவகார அமைச்சர் ஆரம்பித்து வைத்தார்.

இதன்போது ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ எம்.பி.,

அமெரிக்கக் கடற்படைக்குத் தேவையான சேவைகளை வழங்குவதற்குரிய முகாமொன்று கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையில் அமைப்பதற்கு அரசு இணக்கம் வெளியிட்டுள்ளதா, அத்தகையதொரு முடிவு எடுக்கப்பட்டுள்ளதா? என்று வினா எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன,

இது வெளிவிவகார அமைச்சுடன் தொடர்புபட்ட விடயமல்ல. பாதுகாப்பு அமைச்சிடம்தான் கேட்கவேண்டும். – என்றார்.

வெளிவிவகார அமைச்சர் என்ற வகையில் இவ்விடயம் குறித்து நீங்கள் அறிந்துவைத்திருக்க வேண்டும். என்று விமல் குறிப்பிட்டார். (ஐ)

## மஹிந்தவே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுநலவாய நாடாளுமன்ற ஒன்றியத்தின் மாநாட்டில் பங்கேற்பதற்காகச் சபாநாயகர் கரு ஜயசூரிய வெளிநாடு சென்றிருப்பதால், பிரதிச் சபாநாயகர் தலைமையிலேயே சபை கூடியது.

இதன்போது சபாநாயகர் அறிவிப்பு வேளையிலேயே சபாநாயகரின் மேற்படி தீர்மானத்தை அவைக்கு அறிவித்தார் பிரதிச் சபாநாயகர்.

ஆளுங்கட்சிக்கு அடுத்தபடியாகக் கூடுதல் ஆசனங்களைக் கொண்டுள்ள கட்சிக்கே எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்படவேண்டும்.

அந்தவகையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பால் எதிர்க்கட்சித் தலைவராக முன்மொழியப்பட்ட மஹிந்த ராஜபக்ஷவைச் சபாநாயகர் ஏற்றுக் கொண்டுள்ளார் என்றும் பிரதிச் சபாநாயகர் கூறினார்.

அத்துடன், எதிர்க்கட்சி பிரதம கொறடாவாக மஹிந்த அமரவீர செயற்படுவார்.

நேற்று மஹிந்த ராஜபக்ஷ சபை அமர்வில் பங்கேற்று, எதிர்க்கட்சிப் பக்கத்தில் முன் வரிசையில், எதிர்க்கட்சித் தலைவருக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஆசனத்தில் அமர்ந்தார். (ஐ)

## ஜனாதிபதி வேட்பாளரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பீரிஸ் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடுவார் என்று சுதந்திரக் கட்சியின் புதிய பொதுச்செயலராக நியமிக்கப்பட்ட தயாசிறி ஜெயசேகர கூறியிருந்தார்.

இந்த நிலையில், கொழும்பில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்,

அடுத்த ஜனாதிபதி வேட்பாளரை மஹிந்த ராஜபக்ஷவே முடிவு செய்வார். அந்த உரிமையை யாருக்கும் விட்டுத் தர முடியாது.

உள்ளூராட்சித் தேர்தலில் பொதுஜன பெரமுன, 70 வீத மான வட்டாரங்களில் வெற்றி பெற்றுள்ளது. எமது தாமரை மொட்டு சின்னமே அந்த வெற்றியைப் பிரதிநிதித்துவம் செய்கிறது.

இந்தச் சின்னத்தையோ, அடையாளத்தையோ எந்தவொரு கூட்டணிக்காகவும் விட்டுக் கொடுக்க முடியாது. – என்றும் தெரிவித்துள்ளார். (ஐ)

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில் இலங்கை மீதான சர்வதேச நாடுகளின் அழுத்தங்கள் குறித்து ஆளும் மற்றும் எதிர்த்தரப்பினரிடையே, விவாதங்கள் இடம்பெற்றன.

இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சர்வதேச நீதிமன்றம் வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்படுகிறது. வடக்கு – கிழக்கில் பிரச்சினைகள் நடைபெற்றுள்ளமை உண்மையே. அதனை நாமும் ஏற்றுக் கொள்கிறோம்.

ஆனால் இன்று இலங்கைப் பிரச்சினையை இலங்கைக்குள் தீர்த்துக்கொள்ள முடியும் என்பது நிருபணமாகியுள்ளது. சர்வதேச நீதிமன்றம் தேவையில்லை.

ஆனால், இது தொடர்பில் இலங்கையிலேயே விசாரணைகளை முன்னெடுக்க முடியும். இதுதான் இந்த அரசியல் நெருக்கடியில் கிடைத்த ஒரே நன்மையாகும் – என்றார். (ஐ)

## ஜனாதிபதித் தேர்தலுக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் இடம்பெற்ற அரசியல் ஸ்திரமற்ற நிலையைத் தொடர்ந்து பலரும் தேர்தலை நடத்துமாறு கோரி வருகின்றனர்.

குறிப்பாக மஹிந்த சார்புக் கட்சிகள் பொதுத் தேர்தலையும் மாகாண சபைத் தேர்தலையும் விரைவில் நடத்துமாறு கூறி வரும் நிலையில், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சில சிறுபான்மைக் கட்சிகள் ஜனாதிபதித் தேர்தலை நடத்தவேண்டும் என்ற கோரிக்கையை விடுத்துள்ளன.

இருப்பினும் இந்த ஆண்டு தேர்தல் ஆண்டு என இரு தரப்பினரும் கூறி வரும் நிலையில், ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான வர்த்தமானி எதிர்வரும் வெள்ளிக்கிழமை வெளியாகவுள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 31ஆம் திகதி அனைத்து மாகாண ஆளுநர்களையும் பதவி விலகுமாறு உத்தரவிட்ட ஜனாதிபதி, கடந்த இரு வாரங்களில் 8 மாகாணங்களுக்குப் புதிய ஆளுநர்களை நியமித்தார்.

இந்த விடயமும் ஜனாதிபதியின் தேர்தலுக்கான அடுத்த கட்ட நடவடிக்கையாக இருக்கக்கூடும் என்றும் அரசியல் பிரமுகர்கள் கருத்து தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமது நான்கு ஆண்டு காலப் பதவியை நேற்றுடன் பூர்த்தி செய்து விட்டார். தமது தற்போதைய பதவிக் காலத்தின் இறுதி ஆண்டை ஆரம்பித்திருக்கும் அவர், மீண்டும் ஒரு தடவை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு மக்களின் ஆணையைப் பெற விரும்பினால் – அதாவது அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தாமும் ஒரு வேட்பாளராக அவர் போட்டியிடுவார் என்றால் மட்டும் – தமது இந்த கடைசி வருடப் பதவிக் காலத்தில், முற்கூட்டியே தாம் விரும்பும் ஒரு நேரத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கு அவர் அழைப்பு விடுக்க முடியும்.

நடத்தப்படக் கூடிய ஜனாதிபதித் தேர்தலில் தமது சு.க. மற்றும் மஹிந்தவின் பொதுஜன பெரமுன ஆகியவற்றின் பொது வேட்பாளர் தாமேதான் என்பதை உறுதிப்படுத்திய பின்னரே அத்தகைய முற்கூட்டிய தேர்தலுக்கு அவர் அழைப்பு விடுப்பார் என அவருடன் தொடர்புடைய வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

## 1099 ஏக்கர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் காணிகளை கடந்த டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் விடுவிக்குமாறு இராணுவத் தளபதிக்கு ஜனாதிபதி பணித்திருந்தார். எனினும் அரசியல் நெருக்கடி நிலையையடுத்து காணிகளை விடுவிக்கும் நடவடிக்கை தாமதமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், வடக்கில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ள இடரால் இராணுவத்தினர் காணி விடுவிப்பு தாமதமானதாகவும் கூறப்பட்டது.

இந்த நிலையில் இராணுவத்தினரால் விவசாய நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் ஆயிரத்து 99 ஏக்கர் காணிகள் வரும் 19ஆம் திகதி உரிய திணைக்களங்களிடம் கையளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் வனப் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு உரித்தான சுமார் 479 ஏக்கர் காணிகளும், முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் உடையார்கட்டுக் குளம் கிராம சேவகர் பிரிவில் வனப்பதுகாப்புத் திணைக்களத்துக்கு உரித்தான சுமார் 120 ஏக்கர் காணிகளும் அதில் அடங்கியுள்ளன.

அத்தோடு மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் வெள்ளாங்குளம் கிராம சேவகர் பிரிவில் வனப் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு உரித்தான சுமார் 500 ஏக்கர் காணிகளுமே இவ்வாறு விடுவிக்கப்படவுள்ளன. (ஐ)

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுப்பினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன்.

நாடாளுமன்றில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அர்ஜுன் அலோசியஸ் குற்றமிழைத்தாரா என்பது தொடர்பாகவோ அல்லது அவருக்குப் பிணை வழங்கப்பட்டமை குறித்தோ நான் கருத்து தெரிவிக்கப்போவதில்லை.

ஆனால், அவருக்குப் பிணை வழங்குவதற்கான சட்டத்தரணியின் வாதம் குறித்தே நான் இங்கு எடுத்துரைக்க விரும்புகிறேன்.

அர்ஜுன் அலோசியஸ் 11 மாதங்களாக மனைவியை, பிள்ளைகளைப் பிரிந்து வாழ்கின்றார் எனவும், கணவனைப் பிரிந்து மனைவி, பிள்ளைகள் இருக்க முடியாது எனவும் கூறிப் பிணை கோரப்பட்டமைக்கமைய அவருக்குப் பிணை வழங்கப்பட்டது.

11 மாதங்களாக ஒரு குடும்பம் தனித்திருக்க முடியாது எனப் பிணை வழங்கப்படும் பட்சத்தில், 11 வருடங்களுக்கு மேலாக தமது மனைவி, பிள்ளைகளைப் பிரிந்து அரசியல் கைதிகளாக சிறைச்சாலைகளில் வாடுபவர்களுக்கு ஏன் பிணை வழங்க முடியாது? – என்று கேள்வி எழுப்பினார். (ஐ)

## சம்பந்தனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை கொழும்பில் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

கலாநிதி சுரேன் ராகவன், வடக்கு மாகாண ஆளுநராக நியமனம் பெற்ற பின்னர் இடம்பெற்ற முதலாவது உத்தியோக பூர்வச் சந்திப்பு இது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனும் கலந்துகொண்டார். (ஐ)

## குறுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டு எதிரணி எம்.பியான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

குறுக்கு வழிகளில் அதிகாரப் பகிர்வைச் செய்தால் அது ஒரு போதும் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தாது என்றும் அவர் கூறினார்.

நாவலப்பிட்டி நகரில் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தலைமையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

அவசர அவசரமாகப் புதிய அரசமைப்பு ஒன்றை கொண்டுவருவதற்கு சுமந்திரன் குழு முயற்சித்து வருகிறது. புதிய அரசமைப்பில் ஒற்றையாட்சி நாடாகவே இலங்கை இருக்கும் எனப் பிரதமர் தரப்பு சிங்கள மொழியில் கூறி வந்தாலும் அதற்கு மாற்றமான ஒரு கருத்தைச் சுமந்திரன் கூறி வருகிறார்.

அவசரமாகக் கொண்டுவரப்படவுள்ள அரசமைப்பு தொடர்பில் நாட்டு மக்கள் பீதி அடைந்துள்ளனர். பெரும்பான்மை மக்களின் பூரண விருப்பத்துடனேயே சிறுபான்மை மக்களுக்கு அதிகாரம் பங்கீடு செய்யப்படவேண்டும். குறுக்கு வழிகளில் அதிகாரப் பகிர்வைச் செய்தால் அது ஒரு போதும் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தாது.

தமிழ்க் கூட்டமைப்பு அரசமைப்பை எவ்வாறாவது நிறைவேற்றிக் கொள்ளவேண்டும் என்ற விடாப்பிடியாக உள்ளது. இந்த விடயத்தில் முஸ்லிம் கட்சித் தலைவர்கள் மிகவும் கரிசனை எடுத்துக்கொள்ளவேண்டும். மாகாண சபை திருத்தச் சட்டத்தில் விட்ட தவறை அரசமைப்பில் விடக்கூடாது – எனக் குறிப்பிட்டார். (ஐ)

## கிணற்றுக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ள சோகம் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

பாதுகாப்பற்ற கிணற்றில் நீர் அள்ளிக்கொண்டிருந்தபோது தவறி வீழ்ந்து அவர் உயிரிழந்தார் என உறவினர்கள் தெரிவித்தனர்.

அன்னை சாரதா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் புவனேஸ்வரன் டிலானி என்ற சிறுமியே உயிரிழந்துள்ளார்.

டிலானியின் இறுதிக் கிரிகைகளைக் கூட மேற்கொள்ள முடியாத நிலையில் அவர்களின் குடும்ப வறுமை காணப்படுகிறது எனவும், இவர்கள் மிகவும் மோசமான நிலையில் காணப்படும் கொட்டில் ஒன்றில் வாழ்ந்து வருகின்றனர் என்றும் கூறப்பட்டது.

## இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் இயக்கச்சியில் நேற்று மாலை 5.45 மணியளவில் இடம்பெற்றது.

பளைப் பகுதியைச் சேர்ந்த ஜெயக்குமார், கரந்தாயைச் சேர்ந்த குகன் மற்றும் பண்ணை ஒன்றில் பணியாற்றும் சாந்தன் என்ற மூவருமே விபத்தில் உயிரிழந்தனர் என்று தெரியவந்துள்ளது.

உயிரிழந்த மூவரின் சடலங்களும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (ஐ)

## பண்டாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருடர்களும் கொலைகாரர்களும் நாட்டில் தற்போதும் வாழ்ந்து வருகின்றனர் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

அவர்கள் இப்போதும் பண்டாரநாயக்கவின் பெயரையும் கொள்கைகளையும் ஏன் விற்று உண்கிறார்கள் என்று தெரியவில்லையெனவும் அவர் கூறினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நிறுவுனரும் முன்னாள் பிரதமருமான பண்டாரநாயக்கவின் 120ஆவது பிறந்த தினத்தையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நேற்றுக் காலை காலி முகத்திடலில் பண்டாரநாயக்கவின் நினைவுத் தூபிக்கு மலர்ச் செண்டு வைக்கும் நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் கலந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# குற்றங்களின் பின்னணியை கண்டுகொள்ளாத அரசுகள்!

## சுமந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, ஜன. 09

நாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற கொலைகள் உள்ளிட்ட குற்றச் செயல்களின் பின்னணியை எந்தவொரு அரசும் கண்டுகொள்வதில்லையெனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குற்றம்சாட்டியுள்ளார்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்டு நேற்றுடன் 10 வருடங்கள் பூர்த்தியாகின. அதனை முன்னிட்டு பொரளை பொது மயானத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற நினைவஞ்சலி நிகழ்வில் அவர் இவ்விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

லசந்த விக்ரமதுங்க உள்ளிட்ட பலர் படுகொலை செய்யப்பட்டுள்ள நிலையில், நீதி நிலைநாட்டப்படாமல் உள்ளதையிட்டு நாம் கவலையடைகின்றோம்.

தற்போது புதிய அரசு பதவியேற்றுள்ளது. இனிமேலாவது இந்தக் கொலைகள் தொடர்பில் சட்டத்தை நிலைநாட்ட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

என்னைப் பொறுத்தவரை இவ்வாறான சம்பவங்களின் உண்மைத் தன்மையைக் கண்டுகொள்ள எந்தவொரு அரசும் விரும்புவதில்லை என்றே தெரிகிறது.

இந்த அரசிலும், இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. சிலவேளை இந்த விசாரணைகளை முன்னெடுக்க இடையூறுகள் வரலாம்.

மிக் விமானக் கொள்வனவுக்கும் இந்தக் கொலைக்கும் தொடர்புள்ளதென அனைவருக்கும் தெரியும். ஆனால், இதற்கான சாட்சிகள் இன்னும் கிடைக்கவில்லை. இதனாலேயே இடையூறுகள் ஏற்பட்டிருக்கலாம் என நாம் சந்தேகிக்கின்றோம் - என்றார். (ஐ)

# லசந்தவின் 10ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று



கொழும்பு, ஜன. 09

சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் 10ஆம் ஆண்டு நினைவுதினம் நேற்றாகும்.

அவரது நினைவுதினம் பொரளை பொது மயானத்தில் நேற்றுக் காலை மிகவும் உணர்வுபூர்மாக அனுஷ்டிக்கப்பட்டது.

இதில், லசந்தவின் உறவினர்கள், பெருமளவான ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது அன்னாரின் கல்லறைக்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டதோடு, மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

அத்தோடு, இலங்கையில் இதுவரை படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட சிட்டைகள் வைக்கப்பட்டு அவர்களும் நினைவு கூரப்பட்டனர். (ஐ)

# விரைவில் தீர்வு தருவதாக உறுதி கூறியுள்ளார் ரணில்



## சிறிநேசன் எம்.பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜன. 09

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வைப் பெற்றுத் தருவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட திசவீரசிங்கம் நான்காம் குறுக்கு வீதியை புனரமைக்கும் பணிகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.

நகர அபிவிருத்தி அதிகாரசபையின் 40 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டின் கீழ் இந்த வீதிப் புனரமைப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த ஆண்டில் அரசியல் குழப்பங்கள் ஏற்பட்டு ஜனநாயக அரசியலுக்கு அப்பால் கேலிக்கூத்தான விடயங்கள் நடந்தேறின.

சட்ட ஆட்சியைப் பாதுகாக்கவேண்டும், அரசியல் யாப்பைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் நியாயமாக, நீதியாக சிந்தித்ததன் அடிப்படையில் சட்ட விரோதமான - அடாவடித்தனமான சூழ்நிலையைத் தவிர்த்திருந்தோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்த இடத்திலும் பணத்துக்கோ, பதவிக்கோ பலியாகாத கட்சி என்ற உண்மையையும் நாங்கள் நிலைநாட்டியுள்ளோம். ஒருவர் விதிவிலக்காகச் சென்றாலும் ஏனைய அனைவரும் பொதுவிதியாக ஒரு கொள்கையின் கீழ் இருந்துள்ளோம்.

தற்போது ஆட்சியமைத்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வையும், பொருளாதார ரீதியான அபிவிருத்தித் திட்டங்களையும் செய்துதருவதாக உறுதியளித்துள்ளனர்.

அதன்படி எதிர்வரும் இரண்டு வருட காலப் பகுதியில் பலவிதமான அபிவிருத்திகளைச் செய்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. இந்தச் சந்தர்ப்பத்தை நாங்கள் கட்சியுடன் இணைந்து உறுதியாக பின்பற்றுவோம் - என்றார்.

இந்த நிகழ்வில் இலங்கை தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலாளரும் முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான கி.துரைராஜசிங்கம், மாநகர சபை உறுப்பினர் இராஜேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)

# ஐந்து மாடிக் கட்டடத்தில் நேற்றுக் காலை தீ விபத்து

## மூன்று பேர் படுகாயம்

கண்டி, ஜன. 09

கண்டி, யட்டிநுவர பகுதியிலுள்ள ஐந்து மாடிகள் கொண்ட கட்டடமொன்றில் திடீரென ஏற்பட்ட தீப் பரவலில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை ஏற்பட்ட இந்தத் தீ விபத்தில் சிக்கிப் படுகாயமடைந்த மூவரும் கண்டி போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அந்தக் கட்டடத்திலிருந்த ஏனைய சிலரைப் பொலிஸார் பாதுகாப்பாக மீட்டெடுத்தனர். தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

தீ ஏற்பட்டமைக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை. (ஐ)

# இடர் பாதித்த வன்னி மக்களுக்கு காப்புறுதிக் கூட்டுத்தாபனம் உதவி





கிளிநொச்சி, ஜன. 09

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கான உலருணவுப் பொதிகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய அலுவலகம் வழங்கியுள்ளது.

இந்த நிகழ்வில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் வட பிராந்திய முகாமையாளர், சாவகச்சேரி, நெல்லியடி, கிளிநொச்சி, சங்கானை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் மன்னார் கிளைகளின் முகாமையாளர்கள் கலந்துகொண்டனர். (ஐ)

# வாழ்வகப் பரிசுத் தினம்



'வாழ்வகம்' ஸ்தாபகர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் உதய நாளும் வாழ்வகத்தின் பரிசுத் தினமும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.45 மணிக்கு சுன்னாகம், சபாபதிப் பிள்ளை வீதியில் உள்ள வாழ்வகத்தின் செல்லா மண்டபத்தில் வாழ்வகத் தலைவர் ஆறுமுகம் ரவீந்திரன் தலைமையில் நடைபெறும்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பிரதிப் பரீட்சை ஆணையாளர் செ.பிரணவதாசன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

சிறப்பு அதிதியாக வலி. தெற்கு பிரதேச சபைத் தவிசாளர் க.தர்ஷன், வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (விசேட கல்வி) யோ. துஷ்யந்தன், ஓய்வு நிலை ஆசிரியர் செ.திருச்செல்வநாதன் மற்றும் யாழ் வர்த்தக தொழிற்றுறை வேளான் மகளிர் ஒன்றிய தலைவரும், வடக்கு மாகாண மாற்றுத்திறனாளிகளின் ஒன்றிய உபதலைவரும், பெதஸ்தா விஷன் நிறுவனப் பணிப்பாளருமான திருமதி சைலஜா ஷெல்ரன்ரூபேந்திரா ஆகியோர் பங்குபற்றுவர்.

கௌரவ அதிதியாக தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் பங்குபற்றுவார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.01.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.